27th February 1964] [Sri V. Ramaiah]

As this is a regular feature during the rainy season, no special relief is considered necessary. In order to prevent the submersion of land in this area permanently, the Chief Engineer (Irrigation) has accorded administrative approval on 7th February 1964 for Rs. 65,000 under S.M.I.P. for providing drainage facilities to the tharuvai in Tiruchendur taulk, Tirunelveli district.

I may therefore inform the House that water-logging is an annual feature in the above areas and the ryots cultivate only at their risk as and when the water recedes. Plantains and paddy crops were raised at the risk of ryots and no relief is considered necessary except the grant of remission of land revenue and the supply of cocoanut seedlings at concessional rate for planting. The total loss due to damages to crops like cocoanut, plantains, etc., is roughly estimated at one lakh of rupees. 12-00 noon.

## IV.—GOVERNMENT MOTIONS.

### (1) TRANSACTION OF GOVERNMENT BUSINESS ON A NON-OFFICIAL DAY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

" *That Rule* 23 (1) *of the Madras Legislative Assembly Rules be suspended and that official business be taken up on Thursday, the 27th February* 1964. "

The motion was put and carried.

### (2) MID-TERM APPRAISAL OF THIRD FIVE-YEAR PLAN.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

" *That the Report on the Mid-term appraisal of the Third Five-Year Plan relating to Madras State be taken into consideration.*"

A brief review of the achievements of this State under the Plans with special reference to the progress in the first half of the Third Plan period has been made in the publication already circulated to the Honourable Members. The House has had opportunities for assessing the progress of our Plans every year at the time of discussions on the Budget, for the main purpose of the Budget in recent years has been the fulfilment of the objectives of the Plan. It is however appropriate that this House should make a critical appraisal of our performance so far, so that the Government may have the benefit of the constructive suggestions of Honourable Members in completing the schemes laid down in the Third Plan, to the satisfaction of the people.

India's efforts at planned economic development have attracted worldwide attention, for they are unique in seeking intensive development of our economy within a democratic framework. We cannot employ strait jacket methods adopted elsewhere

[Sri M. Bhaktavatsalam] [27th February 1964

for enforcing restraints on consumption or stimulating production, but have to rely largely on persuasion. We have to educate the people on the objectives of the Plan in order to secure their enlightened co-operation and the debate and discussion in this House should be directed towards that purpose. While assigning a dominant role to the public sector, we have allowed sufficient scope for private initiative and investment. The Plans have to function in this country within the framework of a federal constitution with its delimitation of the separate and specific responsibilities of the Centre and the State. Planning, however, has to cover all developmental activities and has therefore tended to blur the distinction between Federal and State functions. The process of planning during the last decade has underlined the need for close and continuous co-ordination between the policies of the State and the Central Governments. The success we have so far achieved is due, in a large measure, to the realisation of the importance of such consultation and co-ordination. The large share which Central assistance plays in financing the State's Plans, is but one aspect of this recognition that the State and Central Governments are partners in carrying out the tasks embodied in our Plans.

The appraisal we are now making should not merely be a survey of the past, but should also be a call for the future. We are focussing attention on the shortcomings or difficulties noticed in the implementation of the Plan not to offer excuses nor to apportion blame, but to find ways and means of overcoming them, so that the targets laid down in the Plan could be realised. I hope that the Honourable Members will keep in view the need for such a constructive approach in this debate.

This State has always had a fair record in the implementation of Plans. The First Plan was of the order of Rs. 86 crores. Since this was a period of acute scarcity of building materials such as cement, steel and machinery the performance was only 93 per cent. The Second Plan was conceived on more ambitious lines and the proposed outlay was Rs. 152 crores. But we were able to improve on this target in the course of the Plan and our final outlay was Rs. 188 crores or 24 per cent higher than the original target. Our performance in the current Plan has been encouraging and gives warrant for the hope that we will be able to fulfil the Plan in full in financial as well as in physical terms, and in fact exceed the targets by an appreciable margin in certain crucial sectors. Of the total Plan provision of Rs. 291 crores, we would have utilised Rs. 177 crores or 61 per cent of the Plan by the end of the current year. For the first year of the Plan, the outlay as fixed in consultation with the Planning Commission was Rs. 47.5 crores, while the actual performance was of the order of Rs. 50 crores. For 1962–63, the Planning Commission originally fixed the outay at Rs. 55 crores, but due to accelerated execution of schemes, we were able to record a performance of Rs. 58.7 crores. The pace of execution of schemes has been further stepped up in the current year with the result that against a target of Rs. 60

27th February 1964] [Sri M. Bhaktavatsalam]

crores fixed by the Planning Commission, our outlay in the current year will be well over Rs. 68 crores. We have now fixed the size of the next years' Plan at Rs. 70·5 crores, but this is quite likely to be executed as in previous years. The outlay for the final year cannot be anything less than Rs. 76 crores. On these trends, the total outlay for the whole Plan period may well be about Rs. 325 crores, against the original provision of only Rs. 291 crores. We may take some satisfaction from the fact that Madras is among the very few States where the Plan is being implemented a little in advance of schedule. This is due in a large measure, to the fact that we have played the part expected of us in mobilising resources for the Plan. When the size of the Third Plan of the State was fixed at Rs. 291 crores, the Centre promised financial assistance to the extent of Rs. 190 crores, leaving it to the State to find the balance of Rs. 101 crores. On the current forecast of resources the contribution of the State will be of the order of Rs. 125 crores and wili thus exceed the target originally set by about Rs. 24 crores. Even so there is still a gap in resources for fulfilling the bigger Plan of Rs. 325 crores. It should be our endeavour to bridge this gap by intensifying Small Savings and tightening up the machinery for gathering existing revenues. I trust the House will extend full support to the measures we should take for raising additional resources for fulfilling the bigger Plan for which the administrative machine is now geared up.

I would like to stress here that the increase in the size of the Plan, apart from the normal escalation in costs, is due in a large measure, to the inclusion of a number of new schemes such as the Kodayar Hydro-Electric Scheme, the second stage of the Mettur Tunnel Hydro-Electric Scheme and the widening of the scope of some of the programmes under General Education, Technical Education and Minor Irrigation. The physical targets achieved under different heads of development, as explained in the publication circulated to the Honourable Members do give us a measure of satisfaction. The targets originally laid down in such vital sectors as Power, Minor Irrigation, Technical Education and General Education will all be appreciably exceeded and thus a higher growth potential would have been created.

In regard to agricultural production too, about which some concern has recently been expressed, the measures implemented in the current Plan period have resulted in the creation of additional production potential to the extent of 5.37 lakhs of tons of foodgrains in the first two years. The seasonal factor does play a dominant role in determining the levels of agricultural production in any year. The levels of productivity in this State are appreciably higher than the national average. Even so further increases which are both necessary and possible, can be secured by a large and more scientific use of fertilizers. The main endeavour in the remaining two years of the Plan should be to streamline the present arrangements for the provision of credit to the farmers including lessees and thereby create conditions for the increased application of fertilizers.

[Sri M. Bhaktavatsalam] [27th February 1964

In making an appraisal of the difficulties in the fulfilment of the Plan, such as shortage of foreign exchange or scarcity of materials like cement and steel or shortage of skilled personnel or even rise in levels of prices, we should remember that these difficulties are inherent in the very process of planning. The whole objective of economic planning is to ensure a rate of growth higher than what could be secured in a self-regulating *laissez faire* economy. In a slow growing or stagnant economy there will not be shortages or pressure on prices, for such an economy does not put forth the maximum efforts that is capable of. Planning, on the other hand, takes note of the resources available and seeks to ensure that they are stretched to the maximum possible extent in achieving certain pre-determined objectives. In this process, naturally, stresses and strains develop. While we should take note of these difficulties and seek to overcome them, it will be short-sighted to think in terms of slowing down the Plans or of pruning the outlays.

During the three Plan periods, we have made appreciable strides in all sectors, agriculture, industry—big and small—irrigation and power, general education and technical education and social services such as medical relief and public health. But in an under-developed country with its low levels of income and consumption, the needs and expectations of the people are naturally many. As we fulfil the targets of a Plan and ensure higher standards of living, fresh hopes are aroused and we have got to reach out towards still higher targets. We should not feel disheartened about this continuing gap between achievements and rising expectations of the people, for it is a natural and healthy phenomenon in a planned economy wedded to the ideals of democracy. Each Plan imparts new dynamism to the economy and gives us fresh confidence in our ability to achieve results by functioning in a co-ordinated and united way. I am confident that the appraisal of the Third Plan which the House is about to undertake will keep this broad perspective in view and that the deliberations in this House will be of help to the administration in the realisation of the targets and objectives of the Plan.

MR. SPEAKER : Motion moved—

"That the Report on the Mid-term appraisal of the Third Five-Year Plan relating to Madras State be taken into cnsideration."

In discussing this motion relating to the mid-term appraisal of the Third Five-Year Plan I request hon. Members not to go into details about their constituencies, about any particular road or bridge or something like that. Let them go into constructive policies and make useful and constructive speeches.

* திரு. செ. மாதவன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டுக்காக போடப்பட்டிருக்கும் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் முன்னேற்றத்தைப் பற்றி, அதை

27th February 1964] *[திரு. செ. மாதவன்]*

பரிசீலிக்கும் முகத்தான் என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். திட்டத்தினுடைய முன்னேற்றங்களைப்பற்றி பேசுவதற்கு முன்னாலே இந்தத் திட்டக்குழுவைப்பற்றியே மறு பரிசீலனை செய்யவேண்டும் என்கின்ற என்னுடைய கருத்தை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்காரால் அமைக்கப்பட்டிருக்கும் திட்டக்குழுவைப்பற்றி, திட்டக்குழுவின் அமைப்பைப்பற்றி இந்த நாட்டினுடைய தலைமை அமைச்சர் உட்பட அனைவரும் இப்படிப்பட்ட திட்டக்குழுவால், நாட்டுக்கு நன்மை ஏற்படுவதற்கு பதிலாக வேலைத் திட்டங்களில் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டி காட்டியிருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். நாட்டினுடைய தேவைகளை அனுசரித்து, அடிப்படையான தேவைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அவைகளை கணக்கிட்டு, அதற்குத் தகுந்தவாறு திட்டங்களை தீட்டி மத்திய சர்க்காருக்கு அனுப்பி, அந்தத் திட்டங்களை நன்கு பரிசீலித்து அமுலாக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு முறை இப்போதும் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் மாநிலங்களில் என்னென்ன தேவைகள் இருக்கின்றன என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு மாநில ரீதியாக திட்டக்குழு அமைக்கப்படவேண்டும் என்பதை, இவ்வாறு ஒரு திட்டக்குழு இன்றியமையாதது என்பதை நமது அமைச்சரவை மத்திய சர்க்காருக்கு உணர்த்த வேண்டும். பாராளுமன்றத்தில் மத்திய சர்க்கார் அமைச்சர் அவர்கள் மாநிலங்களுக்கு இருக்கின்ற தேவைகளை பரிசீலிப்பதற்கு குழுக்கள் தேவை என்று சொல்லியிருப்பதை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும், அந்தந்த மாநிலங்களின் தேவைகளை எல்லாம் அந்தக் குழுக்களின் மூலமாக ஆராய வேண்டும் என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அதே கருத்தைத்தான் நமது மாநில அமைச்சர்களும் ஏற்றுக்கொண்டால்தான் மாநிலங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், திட்டத்தினுடைய பயனை மக்கள் நல்லமுறையில் அடைவதற்கும் வழி ஏற்படும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திட்டங்களை போடுவதோடு, போட்ட திட்டங்களை நிறைவேற்றுவதில் நம்முடைய நோக்கம் சரியாக ஈடேறவில்லை என்பதை 1960-வது ஆண்டில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை துவக்கி வைத்த நேரத்தில் பாராளுமன்றத்தில் தலைமை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய கருத்தும் அதுதான். இன்றைக்கு போடப்பட்டிருக்கும் திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்படுகின்றன, என்பதைப் பார்த்தால், அரசாங்கம் போதிய அளவு கவனம் செலுத்துவதில்லை, அரசாங்க கவனத்தில் குறைபாடு உள்ளது, வேலைத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில் பல தடைகள் ஏற்படுகின்றன. இதற்கு அரசாங்கம் அவ்வப்போது நடவடிக்கை எடுக்க தவறுகிறது என்பதையும், அரசாங்கம் உணர வேண்டும். இந்தத் திட்டத்தைப் பற்றிய அரசாங்கத்தின் அறிக்கை ஒன்று நம் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஐந்து என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஐந்து குறிக்கோள்களிலும் இன்றைக்கு நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று நம்முடைய அமைச்சர்கள்

*[திரு. செ. மாதவன்]* [27th February 1964

சொல்லமாட்டார்கள் என்று நம்புகிறேன். அந்தக் குறிக்கோள் களில், தேசீய வருமானத்தை உயர்த்துவதும், உணவு தான்யங் களில் தன்னிறைவு கொள்வதும், அடிப்படையான பல தொழில் களை பெருக்குவதும், மனித சக்தியை உபயோகப்படுத்தி வேலை வாய்ப்பை அதிகரிப்பதும், இந்த நாட்டிலுள்ள மக்கள் எல்லோ ருக்கும் சம வாய்ப்பு நிலைமையை ஏற்படுத்துகின்ற வகையில், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்கும் உறுதி எடுத் துக் கொள்வதாக குறிப்பிட்டிருக்கிறது இந்த அரசாங்கம். 1960-ம் ஆண்டு, நான்கு ஆண்டுகளுக்கு முன்னுல் மூன்ருவது ஐந் தாண்டுத் திட்டத்தை துவக்கி வைக்கின்ற நேரத்தில், இதே கருத்தை நம்முடைய தலைமை அமைச்சர் அவர்கள் பாராளு மன்றத்தில் வற்புறுத்தினுர்கள். அவ்விதம் பேசிய நேரத்தில் நம் முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படிதான் இந்தக் குறிக் கோள்களைப் போட்டிருக்கின்ருேம், எந்தவிதத்திலும் இந்த ஐந்துக் குறிக்கோள்களை நாம் நிறைவேற்றித் தீர வேண்டும் என்று மக்களுக்கு உறுதி கூறினுர்கள். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னுல், அவர்கள் கூறிய குறிக்கோள்கள் நாட்டில் நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவா என்பதை இந்த மன்றம் ஆராய வேண்டும், என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. ம. கமலநாதன் தலைமை.)

முதன் முதலாக, உணவு தான்யங்களில் தன்னிறைவு அடைந் திருக்கின்ருேமா என்று பார்த்தால், அடைந்திருக்கின்ருேம் என்று நம்முடைய அமைச்சர்கள் தைரியத்தோடு சொல்ல மாட்டார்கள் என்று நம்புகிறேன். இன்றைக்கும் நம்முடைய நாட்டில் பற்ருக்குறை என்ற நிலைமையும், அரிசியை வெளி இடங் களிலிருந்து இறக்குமதி செய்யலாமா என்று பார்க்கின்ற நிலைமை யும்தான் இருக்கின்றது . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் அரிசியின் பற்ருக்குறை இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** நாட்டில் பற்ருக்குறை இருக்கிறது என்று சொல்லும்போது, நம்முடைய நாட்டை மட்டும் எடுத்துக் கொண்டு பற்ருக்குறை இல்லை என்று அமைச்சர் அவர்கள் கருது கிருர்களோ, அல்லது என்னைப்போன்று திராவிட நாடு தனிநாடு, என்ற எண்ணத்தில் சொல்லுகிருர்களோ தெரியவில்லை. பொது வாக உணவு தான்யத்தில் தன்னிறைவு அடையவில்லை. ஏன் அடையவில்லை? இதே அறிக்கையில் விவசாய முன்னேற்றத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிருர்கள். அப்படியானுல் தன்னிறைவு பெருமல் இருப்பதற்கு என்ன காரணம்? போட்டிருக்கின்ற, அல்லது செயல்படுத்தப்பட்டிருக்கின்ற விவசாயத் திட்டங்கள் எல்லாம் என்ன ஆயிற்று? எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து விவசாயத் திட்டங்களை போடுகிருேம். அப்படியிருக்கும்போது ஏன் இந்த குறைபாடு ஏற்படுகிறது என் பதை அமைச்சர்கள் ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

27th February 1964] [திரு. செ. மாதவன்]

வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும் என்று பாராளு மன்றத்திலும் தலைமை அமைச்சர் அவர்கள் வற்புறுத்தி யிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர்களும் அடிக்கடி கூறி வருகிறார்கள். இந்த நாட்டினுடைய செல்வம் எல்லாம், மனித சக்திதான் என்று சொல்லுகிறார்கள், அப்படிப்பட்ட மனித சக்தியை முழு அளவு பயன் படுத்தப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றேதான் சொல்லவேண்டும். 1959-60-ம் ஆண்டில் மத்திய சர்க்காரில் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையில், நம்முடைய திட்டங்கள் எத்தனையோ வந்தும்கூட, வேலை வாய்ப்பு வசதிகள் பெருகியிருந் தும்கூட, திட்ட முடிவு காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது என்று மத்திய சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதை நம்முடைய மாநில சர்க்கார் மறுக்குமோ என்னவோ தெரியவில்லை. பொதுவாக எந்த இடத்தை எடுத்துக் கொண்டாலும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டு வந்திருக்கிறது. இரண்டாவது திட்டம் முடிந்து விட்டது, மூன்றாவது திட்டத்தின் ஒரு பகுதியும் முடிந்து விட்டது, இருந்தும். வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து கொண்டிருக்கிறது என்றால், இதில் என்ன குறைபாடு இருக்கிறது, இதற்குக் காரணம் என்ன? அல்லது இப்போது போடப்பட்டிருக்கும் திட்டத்தில் வேலையில்லாத் திண்டாட் டத்தை போக்குவதற்கு வாய்ப்பே இல்லையா, அல்லது திட்டத்தில் அதற்கு திட்டமிடவில்லையா, என்பதை எல்லாம் நம்முடைய அமைச்சர்கள் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

மூன்றாவது வற்புறுத்திச் சொல்லியிருப்பது, அடிக்கடி காங்கிரஸ் கட்சியினர் தீர்மானம் போட்டுச் சொல்லக்கூடியதும், நாட்டின் தலைமை அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடியதுமான, கருத்து என்னவென்றால், இந்த நாட்டில் இருக்கின்ற பொருளா தார ஏற்றத் தாழ்வுகளை குறைக்க வேண்டும் என்பதாகும். இந் தக் கருத்து ஏற்கனவே காங்கிரஸ் தீர்மானங்களில் எல்லாம் இருக்கின்றது. இப்போது ஆட்சியில் காங்கிரஸ் இருக்கிறது. இதே கருத்தை காங்கிரஸ் புது புது மெருகு கொடுத்து, அதற்கு புதுப்புது பெயர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறதே தவிர, உண் மையில் இந்த நாட்டில் பொருளாதார நிலையில் இருக்கின்ற ஏற் றத் தாழ்வுகள் இன்னும் போகவில்லை என்பதை அமைச்சர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1960-ம் ஆண்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய தொடக்கப் பேச்சில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் இல்லாமல், தனிப்பட்டவர் இடத்தில் செல்வம் குவி யாமல், ஏற்றத் தாழ்வு இல்லாமல், சம அந்தஸ்து நிலையை ஏற் படுத்தப் போகிறோம், அதைத்தான் சோஷலிசத் தத்துவம் என்று கூறுகிறோம் என்று கூறினார்கள். 1960-ம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. இப்போது அதே கருத்தை இன் னொரு பாஷையில் ஜனநாயக சோஷலிஸத் தத்துவம் என்று சொல்லுகிறார்கள். எந்தத் தத்துவம் ஆனாலும் சரி, குறிக்கோள்

[திரு. செ. மாதவன்] [27th February 1964

ஒன்றுதான். ஏற்றத் தாழ்வுகளை நீக்கவேண்டும் என்பது கருத்து. அந்தக் கருத்தை செயலில் கொண்டுவர அரசாங்கம் என்ன செய்தது? அந்தக் கருத்து நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? அந்தக் கருத்து நிறைவேற்றப்படவில்லை என்று, எதிர்க் கட்சியில் இருப்பவர் அல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்த, சாதாரணமானவர் அல்ல, நாட்டின் தலைமை அமைச்சராக இருப்பவர் கூறியிருக்கிறார், பாராளுமன்றத்திலேயே கூறியிருக்கிறார். "நாட்டில் செல்வம் ஒரு இடத்தில் குவிகிறது, செல்வம் ஒரு இடத்தில் குவிவதைத் தடுக்க முடியவில்லை; திட்டமிட்ட பொருளாதாரத்தில் ஓரளவுக்கு குவியும் என்று ஏற்றுக் கொண்டாலும், எதிர்பார்த்ததற்கு மேலாக சில நபர்களுடைய கையில் செல்வம் குவிகிறது; பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆகிறார்கள். ஏழைகள் மேலும் ஏழைகள் ஆகிறார்கள். எங்களால் இதைக் கட்டுப்படுத்த முடியவில்லை" என்று தைரியமாக ஒப்புக் கொண்டிருக்கிறார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாட்டின் தலைமை அமைச்சர் அவர்கள். அதை நமது அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா? நம் மாநிலத்தில் இந்த நிலைமையைத் தடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்ல முடியுமா? இந்த ஆட்சியின் குறிக்கோள் என்ன என்று அறிக்கையில் இருந்து பார்க்கும்போது, பணம் குவிந்தாலும், பணம் குவிய இடம் தந்தாலும், பணக்காரர்களிடமிருந்து வரிகள் மூலமாக வசூலித்து செல்வத்தைக் குறைப்போம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, திட்டமிட்ட பொருளாதாரத்தில் திட்டம் நிறைவேற்றப்படும்போது செல்வம் குவியாத முறையில் திட்டமிட வேண்டும் என்ற கருத்தை ஏற்று திட்டமிடக் கூடாதா? எதற்கு அரசாங்கம் பயப்படுகிறது? இதைப்பற்றி கொஞ்சம் சிந்திக்க வேண்டும். 1960-ம் ஆண்டு மத்திய அரசாங்கத்திலிருந்து தரப்பட்ட அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு திட்டங்களுக்குப் பின்னால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றியதற்குப் பின்னால், "Large numbers of people have not shared it" திட்டங்களின் பயனை பெரும்பான்மையான நாட்டு மக்கள் பெறவில்லை, திட்டங்களின் பயனை நாட்டு மக்கள் அனுபவிக்கவில்லை (They live without primary necessities of life) என்று கூறியிருக்கிறார். தனி மனிதர்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பெறாத நிலையில், பெறக்கூடாத சூழ்நிலையில் திட்டங்களின் விளைவுகள் இருக்கின்றன என்று நாட்டின் தலைமை அமைச்சர் பாராளுமன்றத்தில் ஒப்புக் கொண்ட கருத்து ஆகும். இந்த நிலை 1960-ம் ஆண்டில். 1960-ம் ஆண்டுக்குப் பிறகு மூன்று ஆண்டுகள் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு என்று நினைக்கிறேன், இதே கருத்தை தலைமை அமைச்சர் ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார். இப்படிப்பட்ட நிலை ஏன் ஏற்படவேண்டும்? அரசாங்கத்திற்கு தைரியம் இல்லையா? செல்வம் குவிவதை தடுக்க மாட்டோம் என்று கூறுகிறார்களா? தடுப்போம், அதற்குத்தான் ஜனநாயக சோஷலிஸம் கொண்டு வந்திருக்கிறோம் என்று புது விளக்கம் தரப்போகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன? எங்கள் கருத்து, திட்டம் போடும்போது ஆட்சியில் உள்ளவர்கள் செல்வம் குவிவதைத் தடுக்க வேண்டும் என்று திட்டம் போ-

27th February 1964] *[திரு. செ. மாதவன்]*

வில்லை. எதிர்க் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன், ஐந்து குறிக்கோள்களில் மூன்று குறிக்கோள்களைப் பொறுத்தமட்டில் முக்கியமாக அதிக அளவில் இந்த அரசாங்கம் தோல்வி கண்டிருக்கிறது.

விவசாயத்தைப்பற்றி அமைச்சர் அவர்களும் கூறினார்கள், அரசாங்கம் தந்த அறிக்கையிலும் தரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் விவசாய முன்னேற்றத்திற்காக மைனர் இர்ரிகேஷன், ஃபுட் ப்ரொடக்ஷன் என்று இரண்டு பிரிவுகளாகப் போடப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுகின்றன என்று சொல்ல ஆதாரம் இருக்கிறதா? திட்டங்கள் நிறைவேறுவதைப் பற்றி மேல்பார்வை பார்க்க மெஷினரி—அமைப்பு—இருக்கிறதா? எவ்வளவு ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று அரசாங்கம் கண்காணித்துக் கொண்டிருக்கிறதா? உதாரணத்திற்கு மைனர் இர்ரிகேஷன்—சிறு பாசனத் திட்டத்தில் எவ்வளவு ஊழல்கள் நிறைந்திருக்கின்றன? அமைச்சர் அவர்களே இத்தகைய ஊழல்களை உணர்ந்து பல கால கட்டத்தில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஊழல்கள் மலிந்திருக்கக் காரணம் என்ன? திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்குச் சரியான அமைப்பு இல்லை இந்த அரசாங்கத்தில். சரியான மெஷினரி இல்லாத காரணத்தினால், சிறு பாசனத் திட்டங்கள் சின்னாபின்னமாக ஆகக்கூடிய அளவில் சரியாக நிறைவேற்றப்படாத அளவில் இருக்கிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இந்தத் திட்டத்தை ஒப்படைத்திருக்கிறார்கள். ரெவின்யூ இலாகாவுக்கு ஏற்கெனவே அதிக வேலை இருக்கிறது. பஞ்சாயத்து நிர்வாகமும் அதே இலாகாவிற்குக் கொடுக்கப்பட்டது. சிறு பாசனத் திட்டத்தை அவர்களிடமே ஏன் கொடுக்க வேண்டும்? அதை உணவுத் துறைக்கு ஏன் கொடுக்கக் கூடாது? அதனால்தான் சிறு பாசனத் திட்டங்கள் இந்த நாட்டிலே நல்ல முறையில் நிறைவேற்றப்படவில்லை. நம் மாநிலத்தைப் பொறுத்த அளவில் சிறு பாசனத் திட்டங்கள் மூலமாக அதிகப் பணம் செலவழிக்க முடியும். அந்த அளவுக்கு செலவழிக்கப்பட்டதா? நல்ல முறையில் செலவழிக்க வேண்டும் என்றால் நல்ல அமைப்பு மூலமாகத்தானே செய்யவேண்டும். ஏன் நல்ல அமைப்பை ஏற்படுத்தக் கூடாது? ஏன் இதற்கு ரெவின்யூ இலாகாவை நம்புகிறார்கள்? இதைப்பற்றி நன்றாகச் சிந்திக்க வேண்டும். அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே, விவசாயத் துறையிலே உரத்தைப் பயன்படுத்துவதிலே மிகவும் தோல்வி கண்டிருக்கிறோம், எதிர் பார்த்த அளவுக்கு விவசாயிகள் பயன்படுத்தவில்லை, அதனால் உற்பத்தி குறைந்திருக்கிறது என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏன் இந்த நிலை? திட்டத்தில் எதிர் பார்த்த அளவு அதிகரிக்கவில்லை என்பதற்கான காரணத்தை ஆராய்ந்தார்களா? அதைப்பற்றி ஆராய்ந்து விவசாயிகளுக்கு சொல்லுவதற்கு ஏற்பாடு செய்தார்களா? விவசாயிகளுக்குப் பிரசாரம் செய்ய என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்விபற்றி அதிகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம் மாநிலம் இந்தத் துறையில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறது, ஆரம்பக் கல்வியில் மிக அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்ற குறிப்பு காணப்படுகிறது. ஆனால், கல்விக் கூடங்கள், பள்ளிகள் அதிகரித்திருக்கின்றனவே தவிர, கல்வியின் தரம் குறைந்திருக்கிறதா இல்லையா? கல்வியின் தரம் குறையாமல் இருக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் இந்தத் திட்டத்தில்? பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டத்தில் இடம் இருக்கிறது. ஆனால், தரம் குறையாமல் இருக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? இந்த மாநிலத்தில் முன்னாள் கல்வி அமைச்சராக இருந்து, இப்போது மத்திய சர்க்காரில் அமைச்சராக இருக்கக் கூடிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். "நம் மாநிலத்தில் கல்வியின் தரம் குறைந்து விட்டது; மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது நம் மாநிலத்தில் தரம் குறைந்து விட்டது; அதுவும் டெக்னிக்கல் எஜுகேஷனில் மிகவும் தரம் குறைவாக இருக்கிறது" என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சரே கூறியிருக்கிறாரே, காரணம் என்ன? பள்ளிகளை அதிகரிக்கும்போது தரத்தைக் குறைக்காமல் எப்படிச் செய்யலாம் என்று இந்த அரசாங்கம் ஏன் கவனிக்கத் தவறியது? இந்தத் திட்டத்தில் என்ன செய்திருக்கிறார்கள் என்று இந்த மன்றம் கவனிக்க வேண்டும். . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பார்லிமெண்டில் என்ன சொன்னார்கள், முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள், கனம் சுப்பிரமணியம் என்ன சொன்னார்கள் என்று சொல்லவேண்டாம். கனம் அங்கத்தினருடைய அபிப்பிராயம் என்ன என்பதைப் பற்றி சொல்லலாம்.

**திரு. செ. மாதவன்:** என் அபிப்பிராயத்தைச் சொல்வதற்குத் தான் வந்தேன்; ஆனால் அமைச்சர் அவர்கள் முந்திக்கொண்டு விட்டார்கள். அமைச்சரே ஒத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறதே அதற்குக் காரணம் என்ன? எங்கள் கட்சி சார்பாக, நாங்கள் உணரும் காரணம், திட்டங்களைப் போடும்போது திட்டங்களை மக்கள் திட்டங்கள் என்று அத்தகைய உணர்வை நாட்டு மக்களிடத்தில் உண்டாக்கவில்லை. அத்தகைய உணர்வை நாட்டு மக்களிடத்தில் உண்டாக்க அரசாங்கம் தவறியிருக்கிறது. மக்கள் ஒத்துழைப்போடு, கட்சி சார்பற்ற நிலையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பதில் எந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டாலும், இப்போது கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் செய்யப்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன், உணவு இலாகாவிலே (ஃபுட் ப்ரொடக்ஷன் இலாகா என்று சொல்லுகிறோம்). ஒரு அணைக்கட்டுத் திட்டம் போட்டு லட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்து நிறைவேற்றப்பட்ட திட்டத்தை, அமைச்சரே போய் திறந்து வைக்கிறார். அந்த இலாகா அமைச்சர் போய் திறந்து வைக்கிறார். அந்தத் தொகுதிக்கு எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் எம்.எல்.ஏ அழைப்பில் அந்தத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பெயர் இருக்கிறது. அவர் விழாவில் அமைச்சரை வைத்துக்கொண்டு எதிர்க் கட்சியைத்

27th February 1964] *[திரு. செ. மாதவன்]*

தாக்குகிறார். அணைக்கட்டுத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வந்தது என்று திட்டத்தை மக்களுக்கு விளக்க அமைச்சர் சென்றியிருக்கிறார். அந்த நிலையில் கனம் அமைச்சர் கக்கனுக்கு முன்னால் அவர் வசைமாறி பாடுகிறார் அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு.

12-30 p.m.

இப்படிப்பட்ட நிலை இருந்தால், மக்களிடமிருந்து எப்படி உற்சாகம் பிறக்கும்? மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற இந்த அரசாங்கம் தவறியிருக்கிறது. அதனால்தான் திட்டங்கள் சரியாக நிறைவேற்றப்படவில்லை. நிறைவேறிய திட்டங்களும் மக்களுக்குத் தெரியாமல் இருக்கின்றன. இன்பர்மேஷன் டிபார்ட்மெண்டு என்று ஒரு தனி இலாகா இருக்கிறது. அந்த இலாகாவுக்குக் கொடுக்கப்பட்ட லட்சக்கணக்கான பணம் திருப்பித்தரப்பட்டிருக்கிறது. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி மக்களுக்கு ஏன் நன்றாகத் தெரியப்படுத்தவில்லை என்று கேட்டால், நாங்கள் படங்கள் எடுப்பதற்கு வாய்ப்பு வசதியில்லை, கலைஞர்கள் கிடைக்கவில்லை, எழுத்தாளர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள்.

கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களை இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி ஆராய்வதற்கு அனுப்பினார்கள், திருச்சி மாவட்டத்தில். கல்லூரி மாணவர்கள் என்ன தெரிவித்தார்கள்? இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி மக்களுக்குத் தெரியவில்லை, பல கிராமங்களில் எத்தனை திட்டங்கள் போட்டிருக்கிறார்கள், அந்தத் திட்டங்களினால் அவர்கள் பெற்ற பயன் என்ன என்று மக்களுக்குத் தெரியவில்லை என்று கல்லூரி மாணவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன். திட்டத்தைப்பற்றி மக்களுக்குத் தெரியவில்லை. மக்களுடைய ஒத்துழைப்பை இந்த அரசாங்கம் பெறுவதற்குத் தவறிவிட்டது. இதை அரசாங்கம் உணரவேண்டும். மக்களுக்கு திட்டத்தைத் தெரிவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

இந்த அறிக்கையில் பெருமைப்படக்கூடிய ஒரு பகுதி இருக்கிறது. அது சம்பந்தமாக பொதுக்கருத்தை நான் மறுக்கவில்லை. என்னைப்பொறுத்த வரையில் நாமும் இந்த மன்றமும் அதைப் பற்றி மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று கருதுகிறேன். மக்களிடமிருந்து பகுதித் தொகை (கண்ட்ரிபியூஷன்) வாங்குகிறார்களே, அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு முக்கியமான பகுதி. அதன் காரணமாக திட்ட வேலைகளில் சுணக்கம் ஏற்பட்டு திட்ட வேலைகள் சரியாக நிறைவேற்றப்படாமல், பல இடங்களில் ஆரம்பித்த வேலைகள் அப்படியே நிற்கின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் மக்கள் திட்டத்தைப்பற்றி உணரும்படிச் செய்கிறோம் என்ற கருத்து இருந்தாலும், இதனால் வேலைகளுக்கு சுணக்கம் ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? பணக்காரர்கள் இம் மாதிரி பங்குத் தொகை கொடுக்க முடியும். பணக்காரர்களுடைய

[திரு. செ. மாதவன்] [27th February 1964

செல்வத்தைக் குறைப்பதற்கு எங்களிடம் திட்டம் இருக்கிறது, ஜனநாயக சோஷலிஸம் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பங்குத் தொகை இருக்கிற காரணத்தினால், பல இடங்களில், ஏழைகள் இருக்கக்கூடிய பகுதிகளில் இந்தத் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படாத ஒரு நிலை இருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குடிதண்ணீர் திட்டத்தைப் பற்றியும் இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அரசாங்கம் சரியான திட்டம் இடவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் வேலைகள் நிறைவேற்றப்படாம லேயே இந்த இலாகாவினர் லட்சக்கணக்கான ரூபாய்களைத் திருப் பித் தந்திருக்கிறார்கள். ஏனென்று கேட்டால், வேலை செய்வதற்கு ஆள் இல்லை, எங்கள் இலாகாவில் என்ஜினியர்கள் இல்லை, ஆகவே லட்சக்கணக்கான ரூபாய்களைத் திருப்பித் தருகிறோம் என்று அதிகாரிகள் சாட்சியம் கூறுகிறார்கள். நான் அறிந்த வரையில் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே எந்தெந்த ஊரில் குடிதண்ணீர் திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்று ஒரு பட்டியல் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் கண்டபடி யாவது குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்றக்கூடாதா? என் இவ்வளவு பணம் செலவழிக்கப்படாமல் திருப்பித்தரப்பட்டிருக் கிறது? ஹைவேஸ்டிபார்ட்மெண்டில் ஒரு பகுதியினரிடம் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டிடம் இந்த வேலையை ஒப்படைத் திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை சரிவர நிறைவேற்ற முடிய வில்லை. அதற்குக் காரணம் எங்களிடம் அதிகாரிகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். இது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் ஒரு பெரிய குறை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த விவாதத்திற்கு பதில் அளிக்கும்பொழுது, திட்டத்தினுடைய பலனைப்பற்றி பேசும்பொழுது, அமைச்சர் அவர்கள் நிச்சயம் அதற்கு பதில் சொல்லுவார்கள் என்று நம்புகிறேன். ஜனத் தொகை அதிகரித்துவிட்டது என்று சொல்லுவார்கள். என் அதை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை? ஜனத்தொகை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்க வேண்டாமா? ஜனத்தொகை அதிகரித்து விட்டதன் காரணத்தினால், திட்டத்தின் பலன் நாட்டு மக்களுக் குக் கிடைக்கவில்லை என்று பதில் சொல்லுவது பொருந்தாத வாதம் என்று கருதுகிறேன். திட்டத்தினுடைய பலன் மக்களி டையே செல்லுவதற்கு, மக்கள் திட்டத்தின் பலனை உணர்வதற்கு இந்த அரசாங்கம் நல்ல முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். அப் பொழுதுதான் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றமுடியும். மக்களிடையே திட்டங்களுடைய பலனை உணரவைக்க வேண்டும், மக்களுடைய உணர்ச்சியை எழுப்ப வேண்டும், மக்களுடைய ஒத்துழைப்பைப் பெறவேண்டும். திட்டங்கள் ஒழுங்காக செயல் படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கு சரியான அமைப்பு முறைகள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***டாக்டர் பா. நடராஜன்:** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது நாம் விவாதித்துக் கொண்டு இருப்பது சென்னை

ராஜ்யத்தினுடைய மூன்ருவது திட்டத்தின் இடைக்கால ஆய்வு அறிக்கை. ஆகவே கூடிய வரையிலும் இந்த அறிக்கையைப்பற்றி பேசுவதே நலம் என்று கருதுகிறேன்.

முதலில் இந்த அறிக்கையானது ரொம்ப அழகாக அச்சிடப் பட்டிருக்கிறது. நல்ல பெதர்வெய்ட் பேப்பரில் அச்சிடப்பட்டிருக் கிறது. இம்மாதிரி பேப்பர் கிடைப்பது ரொம்ப அருமை. 140 பக்கங்கள் இருந்தாலும் ஒரு பெரிய வால்யூம் ஆக தெரிகிறது. இன்னும் கூட அட்டை மாதிரி இல்லாமல், நல்ல கெட்டியாக போட்டிருந்தால், இன்னும் பெரிய நூலாக இருக்கும். நான் இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்ருல், மத்திய அரசாங்கம் அகில இந்திய திட்டம் பற்றி ஆய்வு அறிக்கை ஒன்று கொடுத் திருக்கிருர்கள். அது இதை விட பக்கம் கூடுதல்; 189 பக்கம் இருக்கிறது. ஆனுல் இதைவிட பார்வைக்கு சிறியதாகத்தான் இருக்கிறது. இது பெரியதாக இருக்கிறது; நல்ல டைப்பில் அச் சிடப்பட்டு படிப்பதற்கு மிக எளிதாக இருக்கிறது. தமிழாக்கமும் நன்ருக இருக்கிறது. நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்ருல் இவ்வளவு பெரிய நூலாக இருக்கிறது என்று நினைத்து சிலர் படிக்காமல் இருந்து விடலாம். ஆகையினுல் சிலர் தவறுத லான கருத்துக்களைக்கூட சொல்லிவிடலாம். அது கூடாது என் பதற்காகத்தான் இந்த முகவுரையைச் சொல்லிக் கொண்டு இந்த அறிக்கையின் உட்பொருளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கத்தின் பிளானிங் கமிஷன் அனுப்பிய அறிக் கையை படித்த பிறகு, நம்முடைய அரசாங்கம் தயாரித்திருக்கிற இந்த அறிக்கையை படித்திருப்பது ஏதோ வெய்யிலில் இருந்து விட்டு பிறகு பங்கா போட்டிருக்கிற ஒரு மாதிரி குளிர்ந்த ஹாலில் உட்காருகிற ஒரு சுகம் போலிருக்கிறது. ஏனென்ருல், அங்கே தோல்வி தொனிக்கிறது. இங்கே வெற்றி முழக்கம் செய்கிறது. மூன்று ஆண்டுகளுக்குள் 60 சதவிகிதம் நம்முடைய திட்டத்தில் நிறைவேற்றியிருக்கிருேம். மூன்று ஆண்டுகளுக்குள் 51 முதல் 54 சதம் தான் செலவு இலக்காக நாம் அடைய வேண்டும் என்று கருதியிருந்தோம். ஆனுல் 60 சதம் நாம் நிறைவேற்றியிருக் கிருேம். இதில் இருக்கும் முக்கியமான சூட்சுமம் என்ன வென்ருல் நம்முடைய நிர்வாகம்—அட்மினிஸ்ட்ரேடிவ் மிஷினரி என்று சொல்வார்கள்; ஆனுல் அதைவிட இம்ப்பிளிமெண்டேஷன் மிஷினரி என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும். நிர்வாக இயந்திரமானது நன்ருக செயல்படுகிறது என்பதாகும். இம் மாதிரியாக நிர்வாக இயந்திரம் நன்ருக செயல்பட்டுக் கொண் டிருப்பதை குலேக்காமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். நல்ல படியாக ஊக்கம் கொடுக்கும் முறையில், அலுவலர்களுக்கு வாழ்க்கை வசதிகள், சம்பள வசதிகள் போன்றவைகள் எல்லாம் செய்து கொடுத்து, விருகை லஞ்சப்புகாரைச் சொல்லி அவர்களை பயமுறுத்தாமல் பொதுவாக நிர்வாகத்தை நன்ருக நடத்திக் கொண்டு போனுல் நினைத்தபடி நம்முடைய திட்டம் வெற்றி பெறும் என்று தான் கருதுகிறேன். இந்த நிர்வாகத்தை எந்த

*[டாக்டர் பா. நடராஜன்]* [27th February 1964

வகையில் திருத்தி அமைப்பது என்பதைப்பற்றி மத்திய அரசாங்கத்து அறிக்கையில் சில குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டு 'டிரிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன்' எப்படி இருக்க வேண்டும் என்று எல்லாம் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இந்த முறையில் நமது அரசாங்கம் சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஏன் என்றால் இந்த அறிக்கையில் அதைப்பற்றி எல்லாம் குறிப்புகள் இல்லை. ஆகையினால் அதைப் பற்றி அரசாங்கம் சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்றே நினைக்கிறேன். விரைவில் வேண்டிய திருத்தங்கள் செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.

நம்முடைய திட்டம் 291 கோடி ரூபாய் மதிப்புக்கு முதலில் போடப்பட்டது. இப்பொழுது அது 315 கோடி ரூபாய் அளவுக்கு உயர இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அறிக்கையில் 325 கோடி ரூபாய் என்று சுட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த அறிக்கையில் 315 கோடி ரூபாய் என்று தான் போடப்பட்டிருக்கிறது. 315 கோடி ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் அந்த அளவுக்கு நம்முடைய திட்டத்தை விரிவாக்கலாம் என்பதும் அதற்கு வேண்டிய முயற்சிகள் இப்பொழுது நடைபெறுகிறது என்பதும் நாம் பாராட்டக் கூடியது. ஆனால் பல விஷயங்களில் இலக்குகள் மாற்றப்பட்டு இருக்கின்றன. 'பினான்ஷியல் டார்ஜெட்' மாற்றப் பட்டிருக்கிறது. பிஸிகல் டார்ஜெட்டும் மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி இலக்குகளை மாற்றும்போது என்ன காரணங்கள், என்ன காரணத்தினால் பிரயாரிடி மாற்றப்பட்டது என்பதையும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும். உதாரணமாக விவசாய உற்பத்தியை எடுத்துக் கொண்டால் 3-வது திட்ட நிதி ஒதுக்கம் 1,106½ லட்சம் ரூபாய். ஆனால் இந்தத் துறையில் எதிர்பார்க்கும் செலவோ 1,062 லட்சம்தான். அதாவது விவசாய உற்பத்தி சம்பந்தப்பட்ட வரையில், நாம் செலவு செய்ய வேண்டிய தொகையை குறைக்கப்போகிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன காரணத்தினால் இப்படி குறைக்கப்படுகிறது என்பது அறிக்கையில் இல்லை. மேலும் இது வரையிலும் இந்தத் துறையில் ரூ. 509 லட்சம் செலவு செய்திருக்கிறோம். அதாவது 46 சதவிதம் சாதனை தான் அடைந்திருக்கிறோம். மொத்தத்தில் 61 சதவிதம் திட்டத்தினால் சாதனை அடைந்தபோதிலும் உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையிலும் 46 சதம் தான் சாதனை. இது போலவே கால்நடை பராமரிப்பை எடுத்துக் கொண்டால் சாதனை 41 சதவிகிதம் தான். சாதனை பற்றி சதவிகிதமாக புள்ளிவிவரங்கள் கொடுத்திருந்தால் சௌகரியமாக இருந்திருக்கும். இதையெல்லாம் நானே கணக்குப்போட வேண்டியதாக இருந்தது. மூன்றாவது திட்டத்தில் ரூபாய் 352 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் எதிர்பார்க்கும் செலவு ரூ. 296 லட்சம் தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதற்காக கால்நடை பராமரிப்பு செலவுத் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இந்த அறிக்கையில் குறிப்பு ஒன்றும் இல்லை.

27th February 1964] [டாக்டர் பா. நடாராஜன்]

அது போலவே மீன் வளத்தை எடுத்துக் கொண்டாலும் 46 சத விகிதம் தான் நாம் வெற்றி அடைந்திருக்கிறோம். எங்கு எல்லாம் உணவு உற்பத்தி இனங்கள் வருகின்றனவோ அங்கு எல்லாம் சாதனை குறைவாகத்தான் இருக்கிறது. 50 சதவிகிதத்திற்கும் குறைவான சாதனை அடைந்துள்ள துறைகள் எவை என்று பார்த்தால் உணவு உற்பத்தி சம்பந்தப்பட்ட துறைகளாகத்தான் இருக்கின்றன.

சாதனை குறைவான துறைகள் இன்னும் பல இருக்கின்றன. டூரிசம் அல்லது சுற்றுப்பயணத்துறையை எடுத்துக் கொண்டால் அதற்காக ரூபாய் 25 லட்சம் ஒதுக்கி இருந்ததில் ரூபாய் 4 லட்சம் தான் செலவு செய்திருக்கிறோம். 16 சதவிகிதம் தான் சாதனை ஆகியிருக்கிறது. இதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் குறிப்பாக கூற விரும்புகிறேன். ரூபாய் 25 லட்சம் ஒதுக்கியிருக்கும் இந்தத் துறையின் சிறப்பு என்ன என்று பார்த்தால் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் நல்ல வருமானம் கிடைக்கக்கூடிய ஒரு துறை என்பது தெரியவரும். மேல் நாடுகளில் இந்தத்துறை அரசாங்கத்தின் நிதி நிலை வளருவதற்கு ஆதாரமாக இயங்குகிறது. அதை நினைத்தால் இந்தத் துறையில் நாம் போதிய கவனம் செலுத்த வில்லை என்றே நான் சொல்லுவேன். மத்திய சர்க்காரிலும் இந்த ‘டூரிஸ்ட்’ துறை இருக்கிறது. நமது ராஜயத்துக்குள்ளே இருப்பதை மட்டும் நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் செயல்படாத பல இடங்களில் நாமும் செயல் பட்டு இந்த ‘டூரிசத்தை’ பலப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. உதாரணமாக மகாபலிபுரத்தை எடுத்துக் கொண்டால், அங்கு இன்னும் கவர்ச்சியான முறையில், மேலும் பலர் வந்து, அதை பார்ப்பதோடு அங்கு இருந்து சில படிப்பினைகளை அறிந்து கொள்ளும் முறையில் ‘டூரிசம்’ அமைய வேண்டும். அறிவுப் பயனை அளிப்பதாக இந்தத்துறை இருக்க வேண்டும். அமெரிக்காவில் ‘கிராண்ட் கானியன்’ இருக்கிறது. இங்கே அதைப்பற்றிய புவிநூல் தெரிந்த அலுவலர் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு கொலாராடோ ஆறு எப்படி பல்லாயிரம் பல்லாயிரம் ஆண்டு விரைந்து ஓடி, கிராண்ட் கானியன் ஆக மாறுகிறது என்பதை அடிப்படையாக வைத்துக் கொண்டு புவி நூலையே சுவையாகவும் தெளிவாகவும் வருகிற பிரயாணிகளுக்கு எடுத்துச் சொல்லுகிறார்கள். இந்த முறையில் மகாபலிபுரத்தை அடிப்படையாகக் கொண்டு பல்லவர்கள் எப்பொழுது அதை ஆண்டார்கள், தமிழரின் வரலாறு என்ன, எப்படி கடல் கடந்து தங்களுடைய பெருமையை நிலை நாட்டினார்கள், தமிழ்ச் சமுதாயம் எவ்வளவு பெரியது, அவர்களுடைய தொன்மை என்ன, என்கிற முறையில் எல்லாம் வரலாற்று நுணுக்கங்களை வருகிறவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம். இன்னும், இன்று தமிழகத்தில் பொருளாதாரத் துறையில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. எப்படி அடுத்து அணு நிலையம் வரப்போகிறது என்பதைப் பற்றிய விவரங்களையும் சொன்னால், வருகிறவர்கள் சிற்பங்களை பார்த்து மகிழ்வதோடு அறிவு விளக்கம் பெறுவதற்கும் அரிய வாய்ப்பு இருக்கும்.

[டாக்டர் பா. நடராஜன்] [27th February 1964

மாமல்லபுரம் போல பல இடங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. ஆகவே, இந்த முறையில் 'சுற்றுப்பயணத்துறை'யை வளர்த்தால் நம் சாதனை விரைவில் திருந்தும் என்பதற்கு ஐயமில்லை. இப்பொழுது நான் செலவு இலக்குகளைப்பற்றி சொல்கிறேன். பின்னர் வேலைத் திட்ட இலக்குகளைப்பற்றி சொல்கிறேன். தொழில் துறையை எடுத்துக் கொண்டால் 50 சதம் தான் நமது சாதனையாகியிருக்கிறது. நடக்கிற வேலைகளைப் பார்த்தால், மிகுதியான சாதனை ஆகியிருப்பதாக நினைக்க இடமிருக்கிறது. மூன்றுவது திட்டத்தில் தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 2,351 இலட்சத்தில், எதிர்பார்க்கும் செலவு ரூ. 2,178 தான். எதற்காக செலவைக் குறைத்திருக்கிருர்கள் என்று தெரியவில்லை. அது போல வீட்டு வசதித் திட்டத்தை எடுத்துக் கொண்டால் ரூ. 700 இலட்சத்திலிருந்து ரூ. 532 ஆக குறைந்துள்ளது. சில இனங்களுக்கு செலவு இலக்குகளே வகுக்கப்படவில்லை. உதாரணமாக பொதுக் கூட்டுறவுத் துறையை எடுத்துக் கொண்டால், எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. தொழிலாளர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இதுவரையிலும் 47 சதவிகிதம் தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. பிரசாரம், புள்ளிவிவரம் ஆகிய துறைகளில் செலவு சாதனை சொற்பம். புள்ளி விவரத் துறையில் ஒதுக்கப்பட்ட ரூ. 24 லட்சத்தில் ரூ. 7 லட்சம் தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. பிரசாரத்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 31 லட்சத்திற்கு, ரூ. 10 லட்சம் தான் செலவு செய்யப்பட்டது. அதாவது 35 சதம் தான் சாதனை ஆகியிருக்கிறது என்று சொல்ல வேண்டும். இந்த முறையில் பார்த்தால் இன்னும் பல இலாகாக்களை நன்ருக வலுப்படுத்தி நம்முடைய திட்டங்களை முற்ற நிறைவேற்ற வேண்டும் என்பது தெரியவரும்.

பொதுவாக இந்த அறிக்கையின் நோக்கம் என்ன? திட்ட நடைமுறைகளில் எந்தெந்த இடங்களில் குறைபாடுகள் இருக்கின்றனவோ அவற்றை எடுத்துக்காட்டி, அந்த இடங்களை பலப்படுத்துவதற்கும், திட்டத்தை முற்ற நிறைவேற்றுவதற்கும் என்ன செய்யலாம் என்பதை சுட்டிக்காட்டுவதாகும். இந்த விதத்தில் இந்த ஆய்வு அறிக்கை அமைந்திருக்க வேண்டும். ஆனல் பழங்காலத்தில் எழுதுகிற அறிக்கை மாதிரி இது விவரமாக 'டிஸ்கிரிப்டிவ்' ஆக இருக்கிறதே தவிர, கண்ணழித்துக்காட்டும் ஆய்வாக 'அனலிடிகலாக' இல்லை. இன்னின்ன இடங்களில் இன்னின்ன குறைபாடுகள் இருக்கின்றன என்கிற முறையில், எல்லோரும் தெரிந்து கொள்கிற வகையில் இந்த அறிக்கை உருவாக்கப்படவில்லை. திட்டமிடும் இயந்திரத்தை எடுத்துக் கொண்டால் நம்முடைய ராஜ்யத்தில் இருப்பது பழங்காலத்தில் நிர்வாகத்தை நடத்தி வந்த ஒரு இயந்திரமாகவே அது இருக்கிறது. திட்டமிடுதல்—பிளானிங்—என்று சொன்னல், அதற்கு தனியாக ஒரு டெக்னிக் அல்லது நுட்பமுறை இருக்கிறது. மத்திய திட்டக் கமிஷன் கூட தனது இடைக்கால ஆய்வு அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சொல்லியுள்ளது.

27th February 1964] [டாக்டர் பா. நடராஜன்]

"The existing planning machinery in the States needs early strengtheningr in view of the wide range of responsibilities being cast up on State Governments. The aspects to be specially empha- sised are evaluation, manpower, planning, mobilisation of resources, technical project studies, arrangements for obtaining statistical information and systematic reporting and review of progress."

இந்தத் துறைகளிளெல்லாம் திட்ட கமிஷனின் சார்பாக ஒரு கமிட்டி கூட டிரெயினிங் கொடுப்பதற்காக அமைத்திருக் கிருர்கள். அந்த முறையில் நம்முடைய திட்டமிடும் இயந்திரமும் நன்கு செயல்பட வேண்டும். அனேக டெக்னிகல் நிபுணர்கள் இருந்து வேலை செய்தால் நன்ருக திட்டங்கள் அமையும்; நடக்கும். திட்டம் என்று சொன்ஞல் ஏதோ மத்திய சர்க்கார் திட்டமிடுகிருர்கள், அவர்களுடைய ஏஜெண்டாக ராஜ்ய அரசாங்கம் அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்கிற மனப் பான்மை போக வேண்டும். மாநில அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும் கூட்டாளிகள் என்ற நிலையில் இருந்து செயல்பட வேண்டும். ராஜ்ய அரசாங்கத்துக்கு தனக்கேற்ற திட்டம் போடு வதற்கும் நடத்துவதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. மத்திய அரசாங்கத்தில் திட்டத்துறையில் எப்படி நிபுணர்கள் இருந்து வேலை செய்கிருர்களோ, அது போலவே, இங்கிருந்தும் திட்டங்களை உருவாக்கி அவற்றை நடத்தினுல் நல்ல வெற்றி காண முடியும்.

இனி 'பிஸிகல்' டார்கெட்டுகள் அல்லது வேலைத்திட்ட இலக்கு களைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தில் சில பொது இலக்குகள் வைத்திருக்கிருர்கள். ஐந்தாண்டு காலத்தில் விவசாய உற்பத்தி 30 சதவிகிதம் பெருக வேண்டும், தொழில் வளர்ச்சி 70 சதவிகிதம் பெருக வேண்டும், தேசிய வருமானம் 5 சத விகிதத்திற்கு மேல் ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டே போக வேண்டும் என்றெல்லாம் இலக்குகள் வகுத்திருக்கிருர்கள். சென்ற இரண்டு ஆண்டுகளில் எவ்வளவு விவசாயத்தில் சாதனை என்று பார்க்கிருர்கள். ஐந்து சதவிகிதம், 6 சதவிகிதம் என்று இலக்கு போய், 2 அல்லது 2½ சதவிகிதம் தான் வருஷா வருஷம் விவசாய உற்பத்தி பெருகுகிறது என்று கண்டுள்ளார்கள். மேல் என்ன செய்வது என்று சிந்திக்கிருர்கள். அதே போல, தொழிற்சாலை களில் உற்பத்தி 6 சதவிகிதம், 8 சதவிகிதம் என்றுதான் சாதனை ஆகியிருக்கிறது. இலக்குப்படி பார்த்தால், 5 வருஷத்தில், ஆண்டு தோறும் 11 அல்லது 12 சதவிகிதம் சாதனையாக இருக்க வேண்டும். அப்படி பெருகாததற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்தறிய அவர்கள் ஒரு கமிட்டி போட்டு இருக்கிருர்கள். இங்கு நமது விவசாய உற்பத்தி இலக்கு 5 ஆண்டில் 31 சதவிகிதம் அதிகமாக வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிரேம். இன்றைக்கு எந்த அள வுக்கு நம் விவசாய உற்பத்தி இருக்கிறது என்பதைக்காட்ட இந்த அறிக்கையில் ஒன்றும் இல்லை. பொடன்ஷியலை அதாவது விவசாய உற்பத்தித் தளத்தை பெருக வைத்திருக்கிரேம் என்று குறிப்பிட் டிருக்கிருர்கள். ஆனல் அது விவசாய பொருள் உற்பத்திச்சாதனை ஆகிவிடாது. இன்று எற்பட்டிருக்கும் உற்பத்தி திட்டத்துக்கு

[டாக்டர் பா. நடராஜன்] [27th February 1964

முன் இருந்ததைவிட அதிகமா குறைவா, அதிகமானல் அது எவ்வளவு என்பதற்கு எல்லாம் அந்த அறிக்கையில் விவரங்கள் இல்லை. ப்ரொடெக்ஷன் பொடன்ஷியல் வைத்திருக்கிறேம் என்று ஒரு புது தத்துவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதுவரையிலும் இல்லாத ஒரு புது தத்துவம்; உற்பத்தித்தளம் ஏற்படுத்தினல் உற்பத்தி ஆகிவிட்டது என்று பொருளாகுமா? விவசாய உற்பத்தியைப்பற்றி குறிப்பிடுகையில் எவ்வளவு உற்பத்தி என்று மட்டும் பார்க்கக் கூடாது. ஏனென்றல் அது பருவகாலத்தின் வேற்றுமையைப் பொறுத்து வெவ்வேருக வரலாம்; பருவம் சரியாக இருந்தால் திட்ட இலக்கையும் மீறி வரலாம்; பருவம் தவறினல் இலக்குக்கு குறைவாக சாதனை வந்து விடலாம். ஆகவே அமைத்துள்ள உற்பத்தித்தளம் அல்லது பொடன்ஷியலைப் பார் என்கிறது அறிக்கை. இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவர் திருக்குறளின் கருத்தையே இன்றும் காட்டுவதாக இருக்கின்றது.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

என்றர் வள்ளுவர். வெற்றி பெற்று விட்டால், திட்டத்தினல் என்று சொல்வார்கள் என்று நினைக்கிறேன். உற்பத்திக் குறைந்தால் தான் பருவ காலத்தைத் தஞ்சம் அடைகிறார்கள். பொடன்ஷியல் என்கிற புது தத்துவத்தை புகுத்துகிறார்கள் என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. சீசனல் பாக்டர் அல்லது பருவ நிலை குறி என் 70, 80 ஆண்டுகளாக பார்க்கப்பட்டு வந்திருக்கிறது. அதனல் ஏற்படும் உற்பத்திக்குறைவை எலிமினேட் செய்து அல்லது பிரித்துப்பார்த்து நம் முயற்சியினல் ஏற்படும் உற்பத்தி எவ்வளவு என்று கணக்கிட முடியும். சில பொருள்களில் தான் நிறைவு இருக்கலாம். அரிசியைப் பொறுத்தவரை தன் நிறைவு இருக்கலாம். மற்றும் சோளம் கம்பு முதலிய உணவு தானியங்கள் இருக்கின்றன. அவற்றின் உற்பத்தி என்ன நிலையில் இருக்கின்றன என்று அறிக்கையில் இல்லை. என்ன தெரிகிறது? நம்முடைய புள்ளிவிவரங்கள் போதியதாக இல்லை. பெரும்பாலும், நாம் தேசிய வளர்ச்சித் திட்டங்களின் புள்ளி விவரங்களை நம்பியிருக்கிறேம். அதில் எனக்குக் கொஞ்சம் அனுபவம் உண்டு. உண்மையிலேயே அது எவ்வளவு தூரம் சரியான முறையில் தயாரிக்கப்பட்ட உண்மையான புள்ளி விவரம் என்பதைப்பற்றி இந்த சபை உறுப்பினர் பலருக்கும் தெரியும். ஆகவே நான் சொல்லுகிறேன்; அதைப்பற்றி, பரிசீலிக்க ஒரு கமிட்டி போட வேண்டும். சட்ட சபை அங்கத்தினர்களும் நிபுணர்களும் கொண்ட ஒரு கமிட்டி, கம்யூனிட்டி பிராஜக்ட் புள்ளி விவரங்கள் எவ்வளவு தூரம் நடைமுறைக்குப் பொருத்தமானது என்பதைப்பற்றி பரிசீலித்து முடிவுகள் எடுக்க வேண்டும். நாம் சும்மா அதிகாரிகள் படைத்த கனவு உலகத்திலேயே இருக்கக் கூடாது. நமக்குத் தெரியும், கீழே உள்ள அதிகாரிகள் மேலே உள்ளவர்கள் மகிழும் வகையில் சில புள்ளிவிவரங்களை அனுப்புகிறார்கள். சப்ஸிடி கொடுக்கப்படும் திட்டங்களில் ரிபேட் வாங்க, கைத்தறி, கதர் முதலிய விஷயங்

27th February 1964] *[டாக்டர் பா. நடராஜன்]*

களில் எப்படி புள்ளி விவரங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றனவோ, அப்படித்தான் இங்கேயும் செய்கிருர்கள். தொழில் துறையில் நமது ராஜ்யத்தில் என்ன உற்பத்தியாகியிருக்கிறது ; என்னென்ன கெமிகல்ஸ் எவ்வளவு உற்பத்தியாகியிருக்கின்றன; நம் இலக்குகள் என்ன; சாதனை எவ்வளவு; நமக்கு சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, செமண்ட் முதலிய பொருள்கள் எவ்வளவு வேண்டும் என்பவற்றிற் கெல்லாம் குறிப்பாக புள்ளி விவரங்கள் இல்லை. இவைகள் சம்பந்த மாக நம் ராஜ்யத்திற்கென்றே ஏதாவது இலக்குகள் வைத்திருந் தோமா, இருந்தால் எந்த அளவுக்கு நடைமுறையில் உற்பத்தியாகி யிருக்கிறது ?—இந்த விஷயங்கள் ஒன்றும் அறிக்கையில் இல்லை.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் அவர் கள் தமிழ் நாட்டுக்கு எவ்வளவு காஸ்டிக் சோடா, கெமிகல்ஸ், செமண்ட் வேண்டும் என்று டார்கெட்டு தனியாகப்போட முடியுமா என்று தெரிவிக்க வேண்டும்.

**டாக்டர் பா. நடராஜன் :** முதலிலே திட்டம் போடும் போதே யோசித்திருந்தால் அதைப்போட்டிருக்க முடியும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது இருக்கும் இண்டஸ்ட்ரீஸ் ரெகுலேஷன் ஆக்ட் லைசென்ஸ் முறை இவைகளை வைத்து அம்மாதிரி தனிப்பட்ட முறையில் டார்கெட் போட முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர் பா. நடராஜன் :** இப்பொழுது முடியாவிட்டால் கூட, முதலிலேயே கவனித்திருந்தால் நிர்ணயித்திருக்க முடியும். இருக் கிற தொழிற்சாலைகளையும் கூடுதலாக வரும் தொழிற்சாலைகளையும் வைத்து, இந்த ராஜ்யத்திற்கு இவ்வளவு தேவை, வெளி ராஜ்யத் திற்கு ஏற்றுமதி இவ்வளவு செய்யலாம் என்பவைகளை ஏன் கணக் கிட முடியாது ? இவ்வளவு காஸ்டிக் சோடா வேண்டும் என்ருல், இத்தனை உற்பத்தி செய்ய வேண்டும். இத்தனை தொழிற்சாலைகள் என்று நிர்ணயித்துக் கொள்ளலாம். இதை திட்டமிடும் போதே செய்திருக்க வேண்டும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தியா பூராவுக்கும் இவ் வளவு சிமெண்ட் தேவை காஸ்டிக் சோடா இவ்வளவு என்று திட்டம் போடுகிறேம். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித்தனியாக இவ்வளவு என்று எப்படி போட முடியும் என்று தான் கேட்கிறேன்.

**டாக்டர் பா. நடராஜன் :** நமக்கு இவ்வளவு வேண்டும், உற்பத்தி இவ்வளவு செய்ய வேண்டும், இறக்குமதி இவ்வளவு செய்கிறேம் என்பதை எல்லாம் கணக்கிட்டு செய்ய முடியாவிட்டால், அது என்ன திட்டம் என்று கேட்கிறேன்.

இவற்றையெல்லாம் சரிவர செய்து முடிக்க நிபுணர்கள் வேண் டும். இன்றைக்கு இண்டஸ்ட்ரியல் அட்வைஸர் ஒருவரை நமது அரசாங்கம் நியமித்திருக்கிருர்கள். அது போற்றத்தக்கது. இந்த அறிக்கையில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவைகள் நீக்கப்

பட வேண்டுமானல் பல நிபுணர்கள் அதில் கலந்து தயாரிக்க வேண்டும். இனி வேலைத்திட்ட இலக்குகள் பற்றி மட்டும் ஒரு சில சொல்லிவிட்டு முடித்துக் கொள்ளுகிறேன். இந்த ஆய்வின் அறிக்கை 2-ல் உணவு தானியங்கள் சம்பந்தமாக பொட்டன்ஷியல் அதாவது உற்பத்தி உருவாக்கப்பட வேண்டும் திறன் 69.64 லட்சம் டன் என்று சொல்லியிருக்கிறார்கள். இது நமது மூன்றாவது திட்டத்துக்கு. இதில் எதிர்பார்க்கும் சாதனை 1962-63-ல், 58.51 என்று தெரிகிறது. இது பொட்டன்ஷியல் அல்லது உற்பத்தித் தளம் அல்லது திறன் ; நடைமுறை உற்பத்தி அல்ல. இதைப்பற்றி முன்பே குறிப்பிட்டேன்.

அடுத்தபடியாக புன்செய் பண்ணை என்பதை எடுத்துக் கொண்டால், 410 இலக்காக இருக்கிறது. இதில் 1961-62-ல் ஒன்று என்று இருக்கிறது. பிறகு 1964-65-ல் 200 என்று இருக்கிறது. இடையே உள்ள 1965-66-ல், 209 ஆக இலக்கு இருக்கலாமோ என்னவோ ? ஆனல், புள்ளி விவர அறிக்கை 2-லிருந்து 1962-63-லும், 1963-64-லும் இந்த இரண்டு ஆண்டுகளிலும் எந்த விதமான வேலையும் நடக்கவில்லை என்று தெரிகிறது. எதனல் இது நிறுத்தப் பட்டிருக்கிறது என்பதற்கு ஆய்வு அறிக்கையில் விளக்கம் எதும் இல்லை. நதிப்பள்ளத்தாக்குத்திட்ட, நீர்வடி பாப்புகளில் மண் வளப்பாதுகாப்பு என்னும் தலைப்பில் மூன்றாவது திட்ட இலக்கு 14.5 ஆயிரம் ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனல் 1961-66 வரையில் எதிர்பார்க்கும் சாதனைகள் 16.9 ஆயிரம் ஏக்கர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த வகையில் இந்த மாற்றம் ஏற்பட்டது என்பது அறிக்கையிலிருந்து தெரியவில்லை. பொறுக்கு விதைகள் என்னும் தலைப்பில் இலக்கு 74 லட்சம் ஏக்கர் என்றும், திட்ட இறுதியில் எதிர்பார்க்கப்படும் சாதனை 94 லட்சம் ஏக்கர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இலக்கைவிட அதிகமான சாதனையை எதிர்பார்ப்பது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனல் செலவு இலக்கோ குறைக்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தினல் ஃபினன்ஷியல் டார்ஜெட்டுக்கும்—செலவு இலக்குக்கும் ஃபிஸிகல் டார்ஜெட்டுக்கும்—வேலைத்திட்ட இலக்குக்கும்--சம்பந்தம் இல்லாத நிலை இருக்கிறது என்று தெரியவில்லை. இப்படிப்பல சிக்கல்கள் இருக்கின்றன. ரசாயன உரங்களைப் பொறுத்தவரையில் இலக்கு 114 ஆயிரம் டன் என்றும், எதிர்பார்க்கப்படும் சாதனை 583 ஆயிரம் டன் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 114 ஆயிரத்திற்கும் 583 ஆயிரத்திற்கும் எவ்வளவு பெருத்த இடைவெளி இருக்கிறது. ஆயினும் அதற்கு ஒரு விளக்கம் இல்லை. இலக்குக்கும் சாதனைக்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கலாம். ஆனல் ரசாயன உரத்தைப் பொறுத்து இந்த அளவுக்கு வித்தியாசம் இருப்பதைப் பார்க்கும்போது, அதைப்பற்றி, திட்டமிடும்போதே சிந்தனை செய்யவில்லையா என்று தெரியவில்லை. நம்முடைய விவசாய உற்பத்தி இலக்கை எட்ட எவ்வளவு தான் ரசாயன உரம் வேண்டும் என்கிற சிந்தனையில்லாது, ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத முறையில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்று தானே நாம் கருத இடம் இருக்கிறது.

27th February 1964] *[டாக்டர் பா. நடராஜன்]*

சில தலைப்புகளில் இலக்கை குறிப்பிடவில்லை, 'விரகு மரக்காடு வளர்ப்புத்திட்டம்' (ஃப்யூவல் ப்ளாண்டேஷன் ப்ராஜெக்ட்) என்னும் தலைப்பில் எந்தவிதமான இலக்கும் குறிப்பிடவில்லை. எதிர்பார்க்கும் சாதனைகள் என்ற இடத்தில் 13.9 ஆயிரம் ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'தரம் குறைந்த காடுகளைப் புதுப்பித்தல்' என்னும் தலைப்பில் 18 ஆயிரம் ஏக்கர் இலக்கு என்றும், சாதனை 15.7 ஆயிரம் ஏக்கர் தான் என்றும் காணப்படு கிறது. விரைவில் வளரும் மரங்களைப் பயிரிடுதல்' என்னும் தலைப் பில் 5,000 ஏக்கர் இலக்கு என்றும் 2.8 ஏக்கர் தான் சாதனை என்றும் இருக்கிறது. கிராம நலக் காடுகள் என்னும் தலைப்பில் 262 ஆயிரம் ஏக்கர்கள் இலக்கு என்றும், சாதனை 56 ஆயிரம் ஏக்கர் தான் என்றும் காணப்படுகிறது. இப்படி என் சாதனை குறைவாக இருக்க வேண்டும். கிராம நலக்காடுகள் வேண்டாம் என்று திடீர் என்று முடிவு செய்து விட்டார்களா? அந்தப் பணம் வேறு எதற் காகவாவது செலவிடப்பட்டு விட்டதா? அப்படியானல் எந்தெந்த வகையில் செலவிடப்பட்டது. இதற்கு விளக்கம் தந்தால் நல்லது.

இனி ரசாயன உரத்தைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். விவ சாயிகள் ரசாயன உரம் அதிகமாக வாங்கவில்லை என்று இந்த இடைக்கால ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இதைப்பற்றிய அறிவு இல்லை என்று சொல்ல முடியாது. ரசாயன உரத்தினால் ஏற்படக்கூடிய அற்புத சாதனை கள் அவர்களுக்கு தெரியாது என்பது அல்ல. அவர்களுக்கு இந்த ரசாயன உரத்தின் விலை கட்டுப்படியாகவில்லை என்பது தான் காரணம். விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படக்கூடிய பல நிலைமை கள் இருக்கின்றன. அவற்றைக் கவனித்து நீக்கக்கூடிய சூழ்நிலை இன்று நமது திட்டத்தில் இல்லை. பெரிய நிதி கார்ப்பொரேஷன் கள் தொழில்களுக்கு உதவி செய்கின்றன; முதல் போடுகிறார்கள். 80 சதவிகிதம், 90 சதவிகிதம் கூட அரசாங்கம் பங்குப் பணமாக வும் கடனாகவும் உதவுகிறார்கள். அதை வைத்தும் பல அதிபர்கள் தொழில்களை நடத்துகிறார்கள். ஆனால் அந்த முறையில் விவசாயத் தொழிலை நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா? உழவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு போதிய விலை இல்லை. வாங்கு கிற பொருள்களின் விலை ஏறிக் கொண்டே போகிறது. விவசாயி கள் எந்த அளவுக்கு நஷ்டம் அடைகிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் என்று கொண்டு வர வேண்டும் என்ற கருத்து இந்தச் சபையில் அவ்வப்போது தெரி விக்கப்பட்டிருக்கின்றது. விவசாயத்தில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படுகிறது என்பதை உணர வேண்டும். விவசாயத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்காத நிலையில் விவசாயிகள் போதிய அளவு ரசாயன உரத்தை உபயோகிக்க முடியவில்லை. இதுதான் உண்மை. எவ்வளவுதான் ரசாயன உரத்தின் இலக்கை உயர்த்தினாலும், விவசாயிகளுடைய வருமானம் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் இந்த திட்டம் வெற்றியாகும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, தமிழ் நாட்டின் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட இடைக்கால ஆய்வைப் பார்க்கும்போது, இந்த ராஜ்யத்தின் சாதனையை வடநாட்டில் சொல்கிறார்களே அதுபோல 'பஹூத்

அச்சா ஹை' என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. நம்முடைய நிர்வாகம் நன்ருக செயல்படுகிறது. ஆகவே திட்டம் முயற்சியைப் பாராட்டுகிறேன். நமது அரசாங்க சாதனையில் பெருமிதம் கொள்கிறேன்.

* **திரு. நா. மகாலிங்கம்:** கனம் தலைவா அவர்களே, தமிழ்நாடு சர்க்காரின் மூன்ருவது ஐந்தாண்டுத்திட்ட இடைக்கால ஆய்வு பற்றிய அறிக்கையிலே முதல் அமைச்சர் அவர்கள் நாம் அடைந்திருக்கக் கூடிய முன்னேற்றங்களைப் பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிருர்கள். இந்த மூன்று ஆண்டுகளில் மத்திய சர்க்காரும் மற்ற மாநில சர்க்கார்களும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிருர்கள் என்று நாம் எண்ணிப் பார்த்தோமானுல், சென்னை ராஜ்யமானது இந்தியாவிலேயே மிகச் சிறப்பான முறையில் திட்டத்தை அமல் நடத்தியதில் வெற்றி பெற்றிருக்கிறது என்பதைக் குறித்து நாம் பெருமை கொள்ள முடியும். மின்சார உற்பத்தித் துறையிலும் சரி, தொழில் அபிவிருத்தித் துறையிலும் சரி, விவசாய உற்பத்தித் துறையிலும் சரி, நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் சரி, இன்னும் பல்வேறு துறைகளிலும் நாம் மிகச் சிறந்த முறையில் முன்னேறியிருக்கிருேம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

இந்த மூன்ருண்டுகளில் நாம் அடைந்திருக்கக் கூடிய முன்னேற்றம் மிகச் சிறப்பாக இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. மூன்ருவது திட்டத்திற்கு மொத்தம் 291 கோடி ரூபாய் மூதன் மூதல் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் தொகை இப்போழுது 325 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தப்படுவதற்கு மத்திய சர்க்காரும் திட்டக் கமிஷனும் ஒத்துக்கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிருேம். ஆகவே, இந்தத் திட்டக் காலத்தில் எவ்வளவு தொகை செலவு செய்யவேண்டும் என்று நாம் ஆரம்பத்தில் எண்ணியிருந்தோமோ, அதைவிட 34 கோடி ரூபாய் அதிகம் செலவு செய்ய வேண்டும் என்று இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னுல் அது நம்முடைய ராஜ்யத்தில் காரியங்கள் எவ்வளவு நல்ல முறையில் வேகமாக நடைபெற்றிருக்கின்றன என்பதற்கு உதாரணமாக விளங்குகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

தொழிற் துறையில், சில ஆண்டுகளுக்கு முன்னுல் மிகவும் பிற்போக்காக இருந்த சென்னை ராஜ்யம் இன்றைய தினம் நான்காவது ஸ்தானத்தை இந்தியாவில் வகிக்கிறது என்று நாம் பெருமை கொள்ள முடியும். முதலாவது மேற்கு வங்காளம். இரண்டாவது மகாராஷ்டிராம். மூன்ருவது பஞ்சாப் நான்காவது சென்னை ராஜ்யம்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட வரிசை சரியல்ல. மூன்ருவது சென்னை ராஜ்யம். நான்காவது பஞ்சாப்.

27th February 1964]

**திரு. நா. மகாலிங்கம்:** இந்த ஒரு வருஷத்திற்குள்ளாக ஏற்பட்ட மாறுதல் என்று நான் கருதுகிறேன். சென்ற ஆண்டின் புள்ளி விவரப்படி, சென்னை ராஜ்யம் நான்காவது ஸ்தானத்தைப் பெற்றிருந்தது. கனம் அமைச்சர் அவர்களுடைய திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். மூன்ருவது ஸ்தானத்தை சென்னை ராஜ்யம் அடையும்படியான நிலையை ஏற்படுத்தியதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வாறு தொழில் துறையில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம் தொழில்களுக்கு வேண்டிய மின்சார வசதியை நாம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பது தான். புதிய தொழில்களுக்கும் நாம் மின்சார வசதியை கொடுத்துக் கொண்டிருக்கிருேம். அண்டை ராஜ்யங்களான கேரளம், மைசூர், ஆந்திரம் போன்ற ராஜ்யங்களில் மூன்ருவது திட்டத்திற்காக அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொழில்கள் நிறுவப்பட்டு, மின்சார சப்ளைக்காகக் காத்திருக்கக்கூடிய நிலை இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் திட்டத்திலே குறிப்பிட்ட தொழில்களைத் தவிர, மேலும் அநேக தொழில்களை மற்ற ராஜ்யக்காரர்கள் இங்கு வந்து நடத்த முன்வந்தாலும், அவர்களுக்கும் இல்லை என்று சொல்லாமல் மின்சார வசதி செய்துகொடுக்கும் நிலை நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிறது என்று சொன்னல், நம்முடைய ராஜ்ய அரசாங்கம் மின்சார உற்பத்திக்காகப் போட்டிருக்கும் திட்டங்கள்தான் காரணம் என்பதை நான் இந்தச் சமயத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய ராஜ்யத்தில் பல முன்னேற்றமான காரியங்கள் நடந்திருக்க அவற்றைப்பற்றியெல்லாம் சிந்திக்காமல் கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் பேசியதைப் பார்த்தால், அவர்கள் சென்னை சட்டசபை அங்கத்தினராகப் பேசிஞரா அல்லது இந்தச் சபையை மத்திய பார்லிமென்ட் என்று எண்ணிப் பேசிஞரா என்ற சந்தேகம் எனக்கு வந்துவிட்டது. திட்டக் கமிஷனுடைய மூன்ருவது திட்டத்தைப் பற்றி பார்லிமென்டில் நடந்த நடவடிக்கைகளைப் பற்றிய பேச்சாக அவருடையது இருந்ததே தவிர நம்முடைய ராஜ்யத்தின் மூன்ருவது திட்டத்தினுடைய ஆய்வாக அவர்களுடைய பேச்சு விளங்கவில்லை என்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. அவர்கள் பேசும்போது, மூன்ருவது திட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். தேசத்திலே அரிசிப் பற்ருக்குறை இருக்கிறது, உணவுத் தட்டுப்பாடு இருக்கிறது, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகி இருக்கிறது, அது சரியாகத் தீர்க்கப்படவில்லை. குறிக்கோள்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்றெல்லாம் பேசிஞர்கள். அவர்கள் குறிப்பிட்டதையொட்டி நானும் சில விஷயங்களை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பொது மக்களுடைய ஒத்துழைப்பை மூன்ருவது திட்டத்திற்குச் சரியானபடி அரசாங்கம் கோரவில்லை என்று சொல்லப்பட்டது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்படுவதற்காக சட்ட சபை அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில்

[திரு. நா. மகாலிங்கம்] [27th February 1964

நானும் ஒரு அங்கத்தினராக இருந்திருக்கிறேன். அந்தக் குழுவில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்களும் ஒரு அங்கத்தினராக இருந்தார். அவர் அந்தக் குழுவின் முதல் கூட்டத்திற்கு வந்தார். அந்தக் கூட்டத்திலே, 'சென்னை ராஜ்யத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஆயிரம் கோடி ரூபாய் அளவில் திட்டம் தீட்டப்படவேண்டும்' என்று பேசினார்கள். அன்றைய தினம் அந்தக் கூட்டத்திற்கு வந்தாரே தவிர, அதன் பிறகு அந்தக் குழுவின் கூட்டத்திற்கு இதுவரையில் வரவே இல்லை. ஆயிரம் கோடி ரூபாயக்குத் திட்டம் தயார் செய்வது பற்றி அவர்கள் விளக்கம் ஒன்றும் சொல்லவில்லை. அன்றையதினம் கனம் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கலியாண சுந்தரம் அவர்கள், 500 கோடி ரூபாய் அளவில் திட்டம் போட வேண்டும் என்று ஆலோசனை சொன்னார்கள். பிற்பாடு அவர்கள் ராஜ்ய சர்க்கார் செலவழிக்கக்கூடிய தொகை மத்திய சர்க்கார் செலவழிக்கக்கூடிய தொகை ஆகிய இரண்டும் சேர்ந்துதான் 500 கோடி ரூபாய் என்று விளக்கம் கொடுத்தார்கள். ஓரளவுக்கு அவருடைய விளக்கம் அவருடைய யோசனைக்குப் பொருத்தமாக இருந்தது. ஆனால், இதுவரையில் திரு. அண்ணாதுரை அவர்கள் அவருடைய ஆயிரம் கோடி ரூபாய்த் திட்டத்தைப்பற்றிப் பேசவில்லை. இன்று வரைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரோ, அல்லது அங்கத்தினர்களோ அதைப் பற்றி ஒன்றும் இந்தச் சபையிலே இதுவரை பேசவில்லை. இனிமேல் பேசினாலும் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஆக மூன்றாவது திட்டம் சம்பந்தமாக 291 கோடி ரூபாய்க்கு தயாரிப்பது என்றும், அதில் ராஜ்ய அரசாங்கம் 35 கோடி ரூபாய்க்கு வரி மூலமாக வருவாயைப் பெருக்கிக்கொள்ள முன்வரவேண்டுமென்றும் திட்டக் கமிஷனும் ராஜ்ய அரசாங்கமும் முடிவு செய்தது. இதுதான் சென்ற தேர்தலின்போது ஒரு பெரிய பிரச்சனையாகவும் இருந்தது. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அப்போது "இந்த 35 கோடி ரூபாய் வரியை நாங்கள் எதிர்போம். வருஷம் ஏழு, ஏழரை கோடிக்கு என்று வரிபோட்டு வசூல் செய்வதை எதிர்போம்" என்று பேசினார்கள். தேர்தல் விளம்பரங்களிலும் குறிப்பிட்டார்கள். ஆக ஆயிரம் கோடி ரூபாய்க்கு மூன்றாவது திட்டம் தீட்டப்படவேண்டும் என்று சொன்ன தலைவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த 291 கோடி ரூபாய் திட்டத்தையே எதிர்த்தார்கள். அப்படி இருக்க அந்தக் கட்சிக் காரர்களைக் கலந்து கொண்டு இந்தத் திட்டத்தை எவ்வாறு நிறைவேற்ற முடியும்? இதற்கு அவர்களுடைய ஒத்துழைப்பை எவ்வாறு பெற முடியும்?

**திரு. இராம. அரங்கண்ணல்:** திட்டம் வேண்டாமென்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லவில்லை. அதுபோல திட்டத்திற்கும் எங்கள் ஒத்துழைப்பைத் தரமாட்டோம் என்று மறுக்கவும் இல்லையென்பதை நான் கனம் அங்கத்தினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

27th February 1964]

**திரு. நா. மகாலிங்கம் :** முப்பத்தைந்து கோடி ரூபாய் வரியை அவர்கள் எதிர்த்தார்கள். ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்திற்கு இதுவரை விளக்கம் கொடுக்கவில்லை. அதுவே போதும்.

நம்முடைய அரசாங்கம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை கடந்த இந்த மூன்று ஆண்டுகளாக நல்ல முறையில் நிறைவேற்றியிருக்கிறார்கள். மேலும் கனம் மாதவன் அவர்கள் பேசும்போது தண்ணீர் திட்டங்கள் சரியாக நிறைவேற்றப் படவில்லை என்று குறிப்பிட்டார்கள். சர்க்காருடைய அறிக்கையை தயவு செய்து நல்லமுறையில் பரிசீலனை செய்யும்படி நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முடிவு காலத்தில் பப்ளிக் ஹெல்த். வாட்டர் சப்ளை என்ற இனத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த தொகை அப்போது கட்டிட வேலை சரியாக நடைபெற முடியாமையினால் தங்கியிருந்தது. ஆகவே அந்தப் பணத்தில் எட்டு அல்லது ஒன்பது கோடி ரூபாயை தண்ணீர் திட்டத்திற்காக ஒதுக்கி பல நகரசபைகளுக்கு செகண்ட்கிளாஸ் என்று வைத்து நான்காவது திட்டத்திலோ, ஐந்தாவது திட்டத்திலோதான் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் திட்டம் வரும் என்று எண்ணியிருந்த இடங்களுக்கு எல்லாம்—தண்ணீர் வசதி செய்து கொடுத்திருக்கிறோம். ஆகவே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டம் இந்த ராஜ்யத்தில் பின் அடையவில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் சிறப்பாக நடை பெற்று வருகிறது என்று இப்படி நான் சொன்னாலும் இன்னும் சில துறைகளில் அதிக கவனம் செலுத்தப்படலாம். இந்த அறிக்கையில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முப்பது கோடி ரூபாய் அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கிறது, அதற்கு வேண்டிய பணத்தை சேமிப்பின் மூலமும், சிறு சேமிப்பின் மூலமும், இலாக்காக்களுக்கு ஆகக்கூடிய செலவில் சிக்கனம் செய்வதன் மூலமும் இந்த நிதியைப் பெறலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். முப்பத்தைந்து கோடி ரூபாய் திரட்டியாக வேண்டும் என்று முன்பு சொன்னபோது கூட 20 கோடி ரூபாய் அளவுக்குத்தான் புதிய வரியைப் போட்டார்கள். நம்முடைய ராஜ்ய பொருளாதார நிலைமை சிறப்பாக இருந்த காரணத்தினால் தான் நாம் போட்ட திட்டத்திற்கு குறைவாகவே வரி போட்டிருந்தும் கூட நம்மால் செயலாற்றிக்கொண்டு போகக்கூடிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் சில துறைகளிலும் சிக்கனத்தைக் கையாளலாம். ப்ளாக்குகளில் பல உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். சிப்பந்திகளுடைய செலவே நமக்கு அதிகமாகிறது. இத்தனை பேர்களுக்கு வேலை இருக்கிறதா என்பதே பரிசீலனை செய்ய வேண்டிய விஷயமாகும். ரெவின்யூ இலாகாவையும் கம்யூனிட்டி டெவலப்மெண்டு திட்டத்தையும் ஒன்றாக இணைத்து ஒரே இலாகாவாகச் செய்தால் சிக்கனத்திற்கு வழியேற்படும். அவ்வாறு பம்பாய் போன்ற வேறு ராஜ்யத்திலும் செய்திருக்கிறார்கள். அதுபோலவே ஒரு ஜில்லா என்றால் கலெக்டர் முதல் பல ஜில்லா அதிகாரிகள் இருக்கிறார்கள். சில ஜில்லா 30 லட்சம்

[திரு. நா. மகாலிங்கம்] [27th February 1964

40 லட்சம் ஜனத்தொகை கொண்டதாக இருக்கிறது, சில பத்து லட்சம், பன்னிரண்டு லட்சம் இருக்கிறது. இதை கவனித்து பதினைந்து லட்சம் ஜனத்தொகை கொண்ட பிரதேசத்தை ஒரு ஜில்லா என்று பிரித்து, ஒழுங்கு செய்து, மூன்று லட்சத்திற்கு ஒரு சப்கலெக்டர் என்று வைத்து, ஒவ்வொரு ப்ளாக்குக்கும் ஒரு தாசில்தார் என்று நியமித்தால் சிறப்பாக நடைபெறும். குறைந்த செலவு ஏற்படும். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் செலவைக் குறைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நம்முடைய பிராந்தியத்தில் சண்டைக்கு ஆள் எடுத்த போது ராணுவத்தில் சேர பலர் முன் வந்தார்கள். ஆனால் சிலரே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். குறிப்பாக பலர் ராணுவத்திற்குத் தகுதியில்லாதவர்கள், குறுகிய மார்பு narrow chest வளைந்த கால், தட்டையான பாதம் flat foot என்ற காரணங்களுக்காக தள்ளப்பட்டார்கள். இதற்குக் காரணமே நம் ராஜ்யத்தில் உள்ளவர்களுடைய உணவில் போதுமான ப்ரோடின்ஸ் சத்து இல்லாததுதான். மத்திய உணவு மந்திரி அவர்கள் கூட இங்கே பருப்பு வகைகள் அதிகம் உற்பத்தி செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்றார்கள். பருப்பு வகைகள் தென் ராஜ்யங்களில் அதிக உற்பத்தியாவதில்லை. மேலும் நீண்ட காலமாக நம்முடைய தென்னாட்டில், ஜைன, பௌத்த, சைவ சமயப் பிரசாரங்கள் நடந்து வந்திருக்கின்ற காரணத்தினால் பலர் புலால் உணவு உண்பதில்லை. அதனால் மாமிச புரத சத்தும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. நமக்குத் தேவையான பருப்பு வகைகள் பஞ்சாப் போன்ற ராஜ்யத்தில் இருந்துதான் வருகின்றன. போக்குவரத்து செலவு கூடுதலாகப் போனதன் காரணமாக விலையும் ஏறிவிட்டது. குறைந்த வருமானமுள்ள மக்களால் போதுமான அளவு வாங்கி உபயோகப்படுத்த முடியவில்லை. ஆகவே நம்முடைய ராஜ்யத்தில் அதிகமாகப் பருப்பு வகைகளை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாமிசம் உண்பவர்களுக்கும் நல்ல மீன்வகை கிடைக்கும்படி செய்யவேண்டும். நீண்ட கடற்கரை இருக்கிறது. இன்னும் அதிக விசைப்படகுகளை சென்னை நகரப் பக்கத்தில் உபயோகப்படுத்தியாவது மீன்வளத்தை அதிகப்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும். நமக்கு அண்டையில் உள்ள கேரள ராஜ்யத்தவர்கள் எதையும் சாப்பிடுவதால் அதிக புஷ்டியாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள். ராணுவத்திற்கு ஆள் எடுத்த போது அவர்களுடைய பகுதியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக நிராகரிக்கப்படவில்லை.

மேற்கொண்டு இந்த மூன்றாவது திட்ட காலத்தில் நான்காவது திட்டத்திலே செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம். அந்தப் பரிசீலனையை இப்போதே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய

27th February 1964] *[திரு. நா. மகாலிங்கம்]*

ஜில்லாவிலே நதிகளிலே போக்குவரத்து என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. எந்த நதியும் போக்குவரத்துக்குச் சாதகமாக இல்லை. காவிரியில் மாத்திரந்தான் ஏதோ கொஞ்சம் போக்குவரத்து நடத்த முடியும். மேட்டூரிலிருந்து நாகப்பட்டினம் வரை படகிலே சாமான்கள் கொண்டு போகும்படி அமைக்க முடியும் என்ற யோசனை எனக்கு இருக்கிறது. மேட்டூரிலிருந்து திருச்சி வரை சுமார் 430 அடி உயர வித்தியாசம் இருக்கிறது. சுமார் 9 அல்லது 10 அணைகளைக் கட்டினால் நான்கு லட்சம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். திருச்சி தஞ்சை வழியாக நாகப்பட்டினத்துக்கு பக்கிங்காம் கனலைப் போல ஒரு வாய்க்கால் அமைக்கவேண்டும். அந்த மாதிரித் திட்டங்கள் ஐரோப்பாவில் பல நாடுகளில் அமைக்கப்படுகின்றன. சமுத்திரத்தில் உள்நாட்டுக்குள் வெகுதூரம் படகுகளில் சாமான்கள் கொண்டு போவது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அறுபது கோடி ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். நான்காவது திட்டத்தில் செய்ய வேண்டிய வேலைகள் பற்றியும் நுணுக்கமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கனம் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி தண்ணீர் வீணாக சமுத்திரத்தில் போய் விழக்கூடிய நதிகள் பல இருக்கின்றன. பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் ஏற்கனவே நடை பெற்றுக்கொண்டு வருகிறது. அதனால் 3½ லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் பாயும். அதை விஸ்தரிப்பதற்கும் இடம் இருக்கிறது. இதைத் தவிர மதுரையில் 'அப்பர் பெரியாறு' என்று சொல்லக்கூடிய திட்டத்தை நிறைவேற்றினால் 3, 4 லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் பாயக்கூடிய வசதி ஏற்படும். திருநெல்வேலியில் பம்பையாறு நதி திட்டத்தை நிறை வேற்றினால் 3½ லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாயும். இது மாதிரியான பரிசீலனைகளை இப்போதே செய்யவேண்டும். கேரள அரசாங்கத்துடன் பேசி அவர்களுக்குப் பணமாகக் கொடுத்தோ அல்லது மின்சாரத்தைக் கொடுத்தோ ஒரு முடிவுக்கு வந்தால் தெற்கே இருக்கக்கூடிய வரண்ட பிரதேசங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகியவற்றுக்குப் பிரயோசனமாக இருக்கும்.

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை உணர வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்திய சர்க்காரைப் பொறுத்தவரை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் சரியானபடி நிறைவேற்ற முடியவில்லை என்றால் அதற்கு ஒரு முக்கியமான காரணம் தேசிய நெருக்கடியாகும். தேசிய நெருக்கடியின் காரணமாக அயல் நாட்டுச் செலாவணி முழுவதும் ராணுவ சாதனங்களுக்காகப் பயன்படுத்தப் படுகிற காரணத்தால் தொழிற் துறையில் முன்னேற்றம் தடைபட்டு விட்டது. ஆனால் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரை திட்டங்களைச் சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறது என்

பதில் சந்தேகம் இல்லை. 'அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிஆர்கனிசேஷன்' என்ற வகையில் நம்முடைய அதிகாரிகளுடைய வேலையைச் சீர்திருத்தி அமைத்து இருக்கக்கூடியவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கும் அதிகார வர்க்கத்தினருக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ப. உ. சண்முகம்:** கனம் தலைவர் அவர்களே, இதுவரையில் மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தின் இடைக்கால ஆய்வு பற்றிப் பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னுர்கள். எனக்கு முன்பு பேசிய பொள்ளாச்சி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் 'திருவாளர் அண்ணுத்துரை அவர்கள் ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தைத் தந்தார்கள்; ஆனுல் அந்தத் திட்டத்தைத் தந்ததற்குப் பிறகு, திட்டக்குழு கூட்டத்திற்கு வரவேயில்லை,' என்று கூறினுர்கள்.

நான் திரு. மகாலிங்கம் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புவது ஒன்று உண்டு; அறிஞர் அண்ணு அவர்கள், அந்தத் திட்டக் குழுவில் ஆயிரம் கோடி ரூபாய்த் திட்டத்தைப் பற்றி விரிவாக 'டைப்' செய்து அன்று நிதியமைச்சராக இருந்த சுப்பிரமணியம் அவர்களிடத்தில் தந்தார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றித்தான் அமைச்சர் அவர்கள், வெளியிலே பேசும்போது 'ஆண்டித் திட்டம்' என்று பேசினுர்.

அவ்வாறு அமைச்சர் அவர்கள் பேசியதன் காரணமாக—அந்தத் திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக அந்த நாளிலிருந்து அறிஞர் அண்ணு அவர்கள், அந்த திட்டக் குழுக் கூட்டத்திற்குச் செல்லப் போவதில்லையென்ற முடிவுக்கு வந்தார்களே, தவிர, வேறு காரணமில்லையென்பதைத் தங்கள் மூலமாகக் கனம் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட ஆய்வைப்பற்றி எடுத்துச் சொல்கிற நேரத்தில், அரசாங்கம் எவ்வளவு பணத்தைச் செலவழித்திருக்கிறது என்ற பட்டியலைக் கொடுத்திருக்கிருர்கள். திரு. மகாலிங்கம் அவர்களும், இவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினுர்கள்.

பணத்தின் அளவு பற்றி மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதால் பயன் இல்லை. அதனுல் மக்களுக்கு, நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் பலன் என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

அப்படிப் பார்த்தால், செலவழித்த பணத்திற்குத் தக்க பலன் ஏற்படவில்லையென்றுதான் சொல்லவேண்டும். ஆகவே, போட்ட திட்டத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் உணருகிருர்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த பொருளாதார நிபுணர் டாக்டர் நடராசன் அவர்கள் பேசும்போது, ' அழகான புத்தகம், அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது' என்றெல்லாம் சொல்லி, அந்தப் புத்தகத்திலே இருக்கிற கோளாறுகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

புத்தகத்தை அழகாக அச்சிட்டு விடுவதனால், நாட்டு மக்களுக்கு நன்மை ஒன்றும் ஏற்பட்டுவிட முடியாது. 291 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டது 325 கோடி ரூபாய் வரை போகுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். போட்ட திட்டத்திற்கு ஏற்கெனவே கணக்கிடப் பட்டதற்கு மேல் அதிகமாகச் செலவாகும் என்று கூறுகிறார்கள். மேலும் போட்டிருக்கும் திட்டங்களில் பலவற்றை விட்டு விட்டார்கள். அதற்கு என்ன காரணத்தை அரசாங்கம் காட்டப் போகிறது என்று புரியவில்லை. முன்னூற்று இருபத்தைந்து கோடி ரூபாய் செலவு செய்யப் போகிறார்கள். மத்திய அராசங்கத்திலிருந்து 191 கோடி ரூபாய்க்கு மேல் ஒரு சல்லிக் காசு வராது. பாக்கி முழுவதையும் மாநில அரசாங்கந்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள்.

இந்தச் செலவை சரிகட்ட சிறு சேமிப்பு திட்டம் கட்டாயமாக வரப்போகிறது. சிறு சேமிப்புத் திட்ட அதிகாரிகள் நாட்டு மக்களைக் கசக்கிப் பிழியப் போகிறார்கள். சிறு சேமிப்புத் திட்டத்திற்குத் தாங்களாகவே மக்கள் கொடுத்தால், பரவாயில்லை; ஆனால் மக்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இது அரசாங்கம் விதிக்கும் ஒரு மறைமுக வரி என்றுதான் சொல்ல வேண்டும். அதிகமாகச் செலவாகக்கூடிய தொகையை இந்த அரசாங்கம், மத்திய அரசாங்கத்திடமிருந்து மானியமாகப் பெற வேண்டுமே தவிர, மாநில மக்களைக் கட்டாயப்படுத்தி வசூலிக்கக் கூடாது.

இதே மன்றத்தில், அன்று நிதி மந்திரியாக இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்கள், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதில் ஒரு தவறு செய்து விட்டதாகக் கூறினார்கள்.

அன்று அவர்கள் கூறினார்கள் ' அடிப்படைத் தொழில்கள் இந்த நாட்டில் வளரவில்லை; அடிப்படைத் தொழில்கள் வளரவில்லை; உபயோகப் பொருள் தொழில்கள்தான் வளர்ந்திருக்கின்றன ' என்று. 1–30 p.m.

நான் இந்த அரசாங்கத்தை கேட்டுக் கொள்ள விரும்புவது, 'மூன்றாவது திட்ட காலத்தில் அடிப்படைத் தொழில்கள் வளருவதற்கு என்ன வழி கோலப்பட்டிருக்கிறது ?', என்பது தான்.

' இந்த நாட்டில் அடிப்படைத் தொழில்கள் வளருவதற்கு எந்த சாத்தியக் கூறும் இல்லை' என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். நான் கேட்கிறேன் இருக்கிற ஒரு சாத்தியக்கூற்றையும் தள்ளிக் கொண்டு போவதின் காரணம் என்ன ?

[திரு. ப. உ. சண்முகம்] [27th February 1964

துர்பாக்கியகரமான சேலம் இரும்பைப் பற்றி நாங்கள் பேசாத நேரமே இல்லை. அதுபற்றிப் பேசிப் பேசி அலுத்துவிட்ட போதிலும், மீண்டும் அதுபற்றிப் பேச வேண்டித்தான் இருக்கிறது.

'ஒவ்வொரு நாட்டிற்கும் அனுப்பிக் கொண்டேயிருக்கிறோம்;' என்று சொல்கிறார்கள்—கிழக்கு ஜெர்மனிக்கு அனுப்பியிருக்கிறோம். மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பியிருக்கிறோம்; நார்வேக்கு அனுப்பியிருக்கிறோம்; அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கிறோம்; என்று சொல்லிக்கொண்டே போனார்கள்.

"இன்று தஸ்தூர் கம்பெனிக்குக் கொடுத்திருக்கிறோம், அவர்களின் ஆலோசனையைக் கேட்டிருக்கிறோம்; அவர்களிடம் அனுப்பியிருக்கிறோம்", என்று கூறுகிறார்கள்.

"இதற்காக மத்திய சர்க்காரின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது" என்று கூறுகிறார்கள். இன்னுமா மத்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைக்கவில்லை? எப்போது கிடைத்து, அத்திட்டத்தை எப்போது நிறைவேற்றப் போகிறார்கள்? எப்போது நெய்வேலி நிலக்கரி எடுத்து சேலம் இரும்பை உருக்கப் போகிறார்கள்? ஒவ்வொரு சமயமும் ஒவ்வொன்று சொல்லி தட்டிக் கழித்துக்கொண்டு போவது சரி அல்ல. இன்றைய தினம் அதற்குத் கடைக்காலாவது போட்டிருக்க வேண்டும்; ஆனால் இன்றும், 'மத்திய சர்க்கார் அனுமதியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்;' என்று சொல்லுகிறார்கள்.

இன்றும், 'வெளிநாட்டிற்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம்', என்று கூறினால், சேலம் இரும்பு குறித்து இந்த அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. அப்படி, சேலம் இரும்பு பற்றி இந்த அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொள்ளாத அதே நேரத்தில், சேதுசமுத்திரத் திட்டம் பற்றியும் இந்த அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. 'தூத்துக்குடித் துறைமுக விரிவுத் திட்டத்திற்காகத் தனித் திட்டம் போட்டிருக்கிறோம்; அதற்காகத் தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறோம்', என்று சொல்லிவிட்டு, தூத்துக்குடித் திட்டத்தையும் சேதுசமுத்திரத் திட்டத்தையும் இணைத்துச் செய்யவேண்டும், என்று சொல்லி, 'அதற்காக மத்திய அரசாங்கத்தின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்,' என்று சொல்லுகிறார்கள்.

இத்திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று இப்பொழுதா சொல்வது? அந்த அனுமதியை முன்பே பெற்றிருக்க வேண்டாமா? மூன்றாவது திட்டத்தின் எஞ்சியிருக்கும் இரண்டு ஆண்டுக் காலத்தில் அந்த அனுமதி எப்போது வரப் போகிறது? எப்போது அவற்றை துவக்கப் போகிறார்கள்? 'துவக்கி விடுவோம்', என்று அமைச்சர் உறுதியளிப்பாரானால், அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அந்த வேலையை விரைவிலே துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திரு. மாதவன் அவர்கள் பேசும்போது, அமைச்சர் இடைமறித்துக்

27th February 1964] [திரு. ப. உ. சன்முகம்]

கூறினர் 'தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் அரிசி உற்பத்தி பற்ருக்குறையாக இல்லை; தேவைக்கு அதிகமாகவே விளைகிறது' என்று.

இரண்டாவது திட்ட கால முடிவிலேயே கூறினர்கள்—'தேவைக்கு அதிகமாகவே விளைகிறது' என்று. அப்படி நம் தேவைக்கு அதிகமாகவே விளைந்தும் ஏன் விலை குறையவில்லை? விலையைக் குறைக்காததற்குக் காரணம் என்ன? ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு காரணம் கூறுகிருர்கள்—'அண்டை மாநிலங்களோடு நமக்குத் தகுந்த ஏற்பாடு இல்லை; மற்ற அண்டை மாநிலங்கள் நம்மோடு ஒத்துழைக்கவில்லை; அதற்காகத் தகுந்த சட்டம் மத்திய அரசாங்கத்திலிருந்து வரப்போகிறது' என்று. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு காரணம் சொல்கிருர்களே தவிர, சர்க்கார் இது குறித்துப் போதிய அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்பது உள்ளபடியே வேதனை அளிக்கிறது. கவர்னர் உரையில் படிக்கலாம்; வரவுசெலவுத் திட்டத்தில் பேசலாம்; அதை நாம் கேட்கலாம்; ஆனல், போட்டிருக்கிற திட்டங்களினல் பலன் ஏற்பட்டிருக்கிறதா என்ருல், நிச்சயமாக இல்லை. 'ரூ. 291 கோடி செலவு செய்து, அதற்கு மேலேயும் செலவு செய்கிருேம்' என்று சொல்வது படித்துப் பார்ப்பதில் இருக்கிறதே தவிர, அது, நாட்டு மக்கள் சுவைக்கும் வகையில் இல்லை என்று எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆக, மக்கள் அதன் பலனைச் சுவைக்கும் முறையில் இருக்க வேண்டும். அடிப்படைத் தொழில்கள் ஆரம்பிக்க வில்லை, ஆனல், பயன்படும் பொருள் தொழில்கள் தான் துவங்க இருப்பது. அடுத்து, மாநிலங்களின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவேண்டுமென்று சொன்னர்கள். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றிப் பேசும்போது திரு. சுப்பிரமண்யம் அவர்கள், தனிப்பட்டவர்களிடையேயுள்ள ஏற்றத்தாழ்வைக்கூடக் குறைக்க முயற்சிக்க வேண்டுமென்று சொன்னர்கள். அப்படி குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன? தொழில்களைத் தனிப்பட்டவர்கள்தான் துவங்குகிருர்களே தவிர தனிப்பட்டவர்கள் கையில்தான் அது விடப்பட்டிருக்கிறதே தவிர, சர்க்கார் துறையில் துவங்கி அதனல் நாட்டு மக்களுக்கு என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். தொழில் துறையில் இந்த அரசாங்கம் தனிப்பட்டவர்களின் கரத்தைத்தான் பலப்படுத்துகிறதே தவிர, சர்க்கார் துறையில் தொழில்கள் வளர எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சாட்டாமல் இருக்க முடியாது. அடுத்து ஆரம்ப சுகாதார நிலையங்களைப்பற்றி ஒரு வார்த்தை. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிப் பேசும்போது சொன்னர்கள்—'ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொன்று ஏற்படுத்தப் போகிருேம்', என்று. 'மூன்ருவது திட்ட காலத்தில் 220 நிலையங்கள் புதிதாகத் துவக்கப் போகிருேம்', என்று கூறியிருப்பதை இந்தப் புத்தகத்தில் படித்தேன். இருநூற்று இருபது நிலையங்கள் துவக்கப் போவதாகச் சொன்னர்கள். ஆனல் இதுவரை எவ்வளவு துவக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்ததில் அதுபற்றி ஒன்றும் இந்தக் குறிப்பில்

[திரு. ப. உ. சண்முகம்] [27th February 1964

கிடைக்கவில்லை. அப்படி இந்தக் குறிப்பில் இல்லாததை நான் சொல்லப் போகிறேன் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களே யானால், நான் நன்றியுடன் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அப்படி ஒன்றும் துவக்கவில்லை என்று சொன்னால், நான் அதைக் கண்டிக்கிறேன். 'இருநூற்று இருபது துவக்கப் போகிறோம்' என்று கூறிவிட்டு, இதுவரை ஒன்றுக்கூடத் திறக்கவில்லை என்று சொன்னால், அப்படி இருக்கக் காரணம் என்ன? ஏன் துவக்கவில்லை?

'மாதர் நலனுக்காக மாவட்டத்திற்கு நான்கு நிலையங்கள் துவக்கப் போகிறோம்; விதவைத் தாய்மார்களுக்கு எல்லாவித வசதிகளும் செய்து கொடுக்கப் போகிறோம்', என்று சொல்லப் படுகிறது. எந்த மாவட்டத்தில் துவக்கியிருக்கிறார்கள் என்று அருள் கூர்ந்து சொல்லவேண்டும். மாதர் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக் கும் 15 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை. ஆக, மக்கள் நேரடியாக பலன் அனுபவிக்கக்கூடிய திட்டங்களை எப்படிப் புறக்கணித்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். இதுபோல் திட்டங்கள் பல தீட்டப்பட்டிருக்கின்றன; ஆனால், செலவு அதிகரித்திருக்கிறது என்று சொன்னால், அதன் காரணத்தை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். ரூபாய் 291 கோடி செலவு ரூ. 325 கோடிக்கு உயர்ந்திருக்கிறது என்று சொல்லும்போது, புதிதாகத் திட்டங்கள் உண்டா என்றால், இல்லை.

போடப்பட்டிருக்கிற திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அப்போது போட்ட செலவுப் பட்டியல் வேறு—இப்போதுள்ள செலவுப் பட்டியல் வேறு என்றால், இரண்டாவது திட்ட காலத்தில் நமக்கு அனுபவம் ஏற்படவில்லையா? இதே மன்றத்தில் அமைச்சர் அவர்கள் பேசிய புத்தகம் என் கையில் இருக்கிறது. 'நாம் போட்ட திட்டத்திற்கு மேலேயே செலவாகிறது, அப்போது திட்டம் போட்டபோது, அப்போதிருந்த ஒதுக்கீட்டுத் தொகையை வைத்து போட்டது; ஆனால், இப்போது அது மாறிவிட்டது; அதன் காரணமாக மதிப்பீடு உயர்ந்து விட்டது' என்று சொன்னார்கள். அந்தக் கணக்கை வைத்துக் கொண்டாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டியிருக்கப்படவேண்டும். இப்பொழுது 'விலைகள் உயர்ந்து விட்டன. அதனால் செலவு அதிகரித்திருக்கிறது' என்று நாட்டு மக்களிடையே சேமிப்புத் திட்டத்தைக் கொண்டுவந்து புகுத்துவது என்பது, எந்த வகையில் பொருந்தும்? இதை நான் கண்டிக் கிறேன். திட்டத்தை நிறைவேற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர், 'ஒத்துழைக்க மாட்டோம்' என்று சொல்லவில்லை. அப்படி எந்தக் கட்டத்திலும் சொல்லவில்லை. அப்படி, 'ஒத்துழைக்கமாட்டோம்' என்று நாங்கள் சொன்னதாகச் சொல்வது, வீணாகச் சொல்லும் ஒரு பழியாகும். இன்றும், திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று சொல்கிறோமே தவிர, திட்டங்களைப்புறக்கணிக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை? உருப்படியாக நீங்கள் ஏதாவது சொன்ன துண்டா? என்று கேட்பார்கள். நாங்கள் இதே மன்றத்தில்

சொல்லி விவாதிக்கப்பட்டிருக்கிறது. "சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கடற்கரை ஓரமாக ரோடு போடலாம் நல்ல பாதை அமைக்கலாம்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு ஏதாவது பலன் ஏற்பட்டதா? இதே மன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், 'பாலாற்றில் அடி ஊற்று நீரை மேலே கொண்டுவர என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்? அத்திட்டத்தைத் துவக்க வேண்டும்' என்று சொன்னார்கள். அதன் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன என்று கேட்கிறேன். ஆகவே, நான்காவது திட்டத்தை எடுத்துக் கொள்ளும்போது நான் கூறியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு, இதுவரை திருப்தி இல்லாவிடினும் வருகிற ஆண்டுகளிலாவது மக்கள் திருப்தி அடையும் வகையில் திட்டத்தை திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN (SRI M. KAMALANATHAN): The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-38 p.m.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 81. *Notification issued by the Additional Development Commissioner in his Roc. No. 50458/63, Rural Development and Local Administration, dated 13th November 1963, withdrawing the Notification No. 30329/59, dated 27th May 1959, regarding the extension of certain provisions of the Madras District Municipalities Act, 1920, relating to building rules and regulations to the areas of Eruvadi Panchayat in Nanguneri taluk of Tirunelveli district. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

* 82. *Notification issued with G.O. Ms. No. 1775, Public (General-M), dated 19th November 1963, regarding use of Tamil as official language in respect of all official communications from all the Government offices under the Revenue Department (Settlement of Estates) and the Police Department with effect on and from 1st December 1963. [Laid on the Table of the House under section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956).]*

* 83. *Notification issued with G.O. No. 2160, Rural Development and Local Administration, dated 10th October 1963, regarding rules relating to the preparation and submission of Annual Reports of Panchayat Union Councils. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*